www.tamilarangam.net

# ஈழப்போராட்டத்தில்....

# ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி

# EPRLF IN EELAM STRUGGLE

## இரத்த வெள்ளத்தில் உயிருடன் போராடும் ஈழமக்கள்.

ஈழமக்கள் புதிய புதிய நெருக்கடிகளையும், இழப்புகளையும் சந்திக்கநேரிட்டுள்ளது. இவ் இழப்புகள் புரட்சிகரவரலாற்றை புரட்டிப்பார்க்காதோருக்கு விரக்தியும் போராட்டத்தில் வெறுப்பும் ஏற்படுவது நியதி. நாம் விடுதலைபோராட்டத்தில் வெறுப்புற்று ஒதுங்குவதனால் மக்கள் எதுவித நன்மையும் பெற்றுவிடமுடியாது மாறாக நெருக்கடிகள் அதிகரிக்கவே செய்யும்.

சிறிலங்கா பாசிச அரசு தனது முழுப் பலத்தையும் தமிழ்மக்களுக்கெதிராக பயன்படுத்தவில்லையென்பதையும் இது போராட்டத்தின் ஆரம்பகட்டம் என்பதையும் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். புரட்சிகரவிடுதலைபோராட்டமானது சரியான முறையில் முன்னெடுக்கப்படாதவிடத்து விடுதலைபோராட்டம் பின்னடைவது தவிர்க்கமுடியாது. மக்களின் விடுதலையை வென்றெடுக்கப்புறப்பட்ட அமைப்பொன்று பதவிவெறிகொண்டு மக்களது வாய்களை பூட்டி, மக்களுடைய கருத்துகளுக்கு மதிப்பளியாது வெகுஜன ஸ்தாபனங்களதும், விடுதலை இயக்கங்களதும் சுதந்திரத்தை பறித்து எதிர்க்கெதிரான தயாரிப்புகளை முடக்கி சிறிலங்கா பாசிஸ்டுகளுக்கு வழிசமைத்துக்கொடுத்துள்ளார்கள்.

எத்தனையோ இழப்புகளுக்கும் தியாகங்களுக்கும் மத்தியில் இயக்கங்கள் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்த பிரதேசங்களை சிறிலங்கா இனவெறியர்களுக்கு புலிகள் தாரைவார்த்துக்கொடுத்து மக்களுடைய அழிவுக்கு வழிசமைத்துவிட்டார்கள். குடாநாடு தவிர்ந்த மற்றைய பிரதேசங்களில் எவ்வாறு எமது பெண்கள் இராணுவத்தின் மேச்சல் நிலமாக இருக்கும் நிலை இன்று குடாநாட்டிலும் ஏற்பட வழிசமைத்து கொடுக்கப்பட்டுள்ளது. இவ் அநியாயமான நூற்றுக்கணக்கான உயிர், சொத்து இழப்புகளுக்கும், போராட்ட பின்னடைவுக்கும் புலிகளே பொறுப்பேற்கவேண்டும்.

ஈழவிடுதலைபோராட்டத்தில் EPRLF தனது அத்தியாயத்தை புரட்டுகின்றது. கடந்தகால அனுபவங்களில் இருந்து தனது பாதையை மேலும் செழுமைபடுத்தி எதிர்கெதிரான பாரிய தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளது. ஈழவிடுதலை இயக்கங்களிடையே ஐக்கியமின்றி ஈழவிடுதலை சாத்தியமற்றது என்பதனை உணர்ந்துகொண்டு அனைத்து சக்திகளையும் பொதுவேலைத்திட்டத்தின் கீழ் ஒருங்கிணைப்பதை எமது புரட்சிகர கடமையாக கொண்டுள்ளோம். மக்களே புரட்சிகரமான பாதையில் அணிதிரளுங்கள். EPRLF இன் கரங்களை பலப்படுத்துங்கள். ஐக்கியம் என்றும் தளத்தில் நின்று இறுதிவெற்றிவரை போராடுவோம்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நமக்குள் சண்டை வேண்டாம்" -6-4-87

# கிட்டு கொலை முயற்சி பற்றி பாரபட்சமற்ற விசாரணை

## விடுதலைப்புலிக்கு ஈழ மக்கள் புரட்சி முன்னணி யோசனை

சென்னை, ஏப்-6— யாழ்ப்பாணம் விடுதலைப் புலித்தளபதி கிட்டுவை கொலை செய்ய நடந்த முயற்சி குறித்து யாழ்ப்பாணம் மக்கள் குழுவின் பாரபட்சமற்ற விசாரணைக்கு விடுதலைப் புலி இயக்கம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இந்த முன்னணியின் (ஈ. பி. ஆர். எல். எப்) சார்பில் கேதீஸ்வரன் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது :-

தளபதி கிட்டு மீதான கொலைமுயற்சியில் எங்கள் முன்னணிக்கு எந்தவித தொடர்பும் இல்லை.

இலங்கையின் கைக்கூலிகளே இந்த முயற்சியில் ஈடுபட்டிருக்கலாம். விடுதலைப்புலி இயக்கத்தில் தலைமை போட்டியாலும் இது நடந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. எனவே, இது குறித்து பாரபட்சமற்ற விசாரணைக்கு ஏற்பாடு செய்யவேண்டும்.

இதற்கிடையேமற்ற போராளிக் குழுக்களை தாக்குவதைவிடுதலைப் புலிகள் நிறுத்த வேண்டும்.

இவ்வாறு கேதீஸ்வரன் கேட்டுக் கொண்டிருக்கிறார்.

### இலங்கை அதிபர்

இதற்கிடையே இலங்கையில் உள்ள இந்தியத் தூதர் தீட்சித்தை அதிபர் ஜெயவர்த்தனா அழைத்துப் பேசியிருக்கிறார்.

யாழ்ப்பாணம் பகுதியில் மற்ற போராளிகளுக்கு எதிராக விடுதலைப் புலி இயக்கத்தினர் தொடுத்துவரும் தாக்குதலைப் பற்றி கொழும்பில் நடந்த இந்த பேச்சின்போது இந்தியத் தூதரிடம் இலங்கை அதிபர் குறிப்பிட்டார்.

கடந்த வியாழக்கிழமை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தமக்கு அனுப்பிய செய்தி குறித்து விரிவாகப் பரிசீலித்து வருவதாகவும் ஜெயவர்த்தனா இந்தியத் தூதரிடம் அப்போது கூறினார்.

இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதர் திலகரத்னே மூலம் ராஜீவுக்கு பதில் அனுப்புவதாகவும் கூறினார்.

இலங்கை அரசு தனது ராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி அமைதிப் பேச்சு நடத்த பயனுள்ள முன் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ராஜீவ் இந்த செய்தியில் கூறியிருந்தார்.

## யாழ் அருகில் 250 தமிழர் கைது

தினமணி

16-5-87 சென்னை, மே 15— யாழ்ப்பாணம் அருகே மாமன்கும் என்ற கிராமத்தில் நடந்த தேடுதல் வேட்டையின் போது 250 தமிழர்களை சிங்கள பாதுகாப்புப் படையினர் வியாழக்கிழமையன்று கைது செய்துள்ளனர். இத்தகவலை ஈழ மக்கள் தகவல் நிலையம் (இ.பி.ஐ.சி.) வெளியிட்டுள்ள பத்திரிகை குறிப்பில் தெரிவித்துள்ளது.

புதூர் என்ற கிராமத்திலும் இலங்கை பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர். தாவடி என்ற இடத்தில் கடந்த புதன்கிழமையன்று இலங்கை ராணுவத்தினர் சுட்டதில் ஒருவர் பலியாகியுள்ளார் என்றும் அந்த குறிப்பில் தெ.ரிவிக்கப்பட்டுள்ளது.

## Massacre is bid to cover up power struggle —EPRLF

# 'Pressure LTTE to stop killings'

NEWS TODAY 8-4-87

Madras, Apr 8.

The Eelam People's Revolutionary Liberation Front (EPRLF) Tuesday called upon all democratic and progressive forces in India to exert "maximum pressure" on the Tamilnadu-based LTTE leadership to stop the "orgy of violence" being perpetrated by it on other militant groups in Sri Lanka.

EPRLF official spokesman L Ketheeswaran reiterated the charge that the LTTE had "massacred" the cadres of the EPRLF and other militant groups to cover up and neutralize the belief in Jaffna that the attempt on LTTE commander Kittu's life was the direct outcome of the power struggle within the LTTE leadership.

He said the brutal massacre of the cadres and sympathisers of the EPRLF and other organisations who were held in capacity was in no way different from the bloody massacre of civilians in a Sri Lanka army camp in late 1984.

In that incident in Eeraperiyaklulam, Vavunia 20 civilians, who had been taken into custody, were gunned down in cold-blood by the Sri Lankan soldiers. The explanation given by the Sri Lankan propoganda machinery was that the killings took place when those were held in custody in the army camp tried to escape. LTTE's claim now was also that 18 members of other groups were killed when they attempted to escape.

"This is not the first time that the LTTE engaged in massacres similar to that of the Sri Lankan armed forces. Further the propoganda machinery of both the LTTE and the Sri Lankan Government seem to follow identical and sterio-type explanations to the perpetration of a genocidal situation against the Tamil civilian population," it said.

The EPRLF called upon the Tamils of Sri Lanka and the people of Jaffna to bring pressure on the LTTE to stop its policy of "liquidating all forces" which refused to submit to its dictatorial designs.

### PROTEG's appeal

The PROTEG (Organisation for the Protection of the Tamils of Eelam from Genocide and other violations of human rights) Tuesday condemned the "recent "internecine killings" among the Tamil liberation groups in Sri Lanka.

These actions, including the assass attempt on LTTE's Jaffna commander 'Kittu' a killings of youths of other groups by the Libe Tigers of Tamil Eelam (LTTE) were tantamo gross violations of human rights a charge le against the island government's "genocid tions," the PROTEG said in a statement he

It said disunity among the liberation group the fratricidal killings will only strengthen the ha the Sri Lankan Government, particularly durin critical period for the beleaguered Tamil peo the island.

Urging the Tamil liberation groups to sink differences and to agree on a common coc conduct based on respect for human rights, it state terrorism of the Sri Lankan Government "c not be fought with "terrorism" among the liber groups themselves. •

### Exaggerated, says LTTE

The Liberation Tigers of Tamil Eelam (LTTE) made some caustic remarks against the med Colombo and the Sri Lankan Government for sr ing "highly exaggerated figures" of those killed the assassination attempt on its Jaffna comman "Kittu".

A Government communique issued here Mon said that over 250 Tamil militants, including wor belonging to the rival factions, were killed by LTTE in reprisals.

According to newspapers published from Jaf the LTTE said that the Government seemed to very concerned about these people by giv exaggerated figures of those killed whereas, wl innocent civilians were killed in shelling and bo ings, nobody seemed to raise any voice.

The LTTE however has admitted that it has "s dead" altogether 18 members of the rival Ta factions when they "tried to escape from custod

According to the Jaffna dailies, a spokesman the LTTE has also given an assurance in a pre conference that those who are in custody now wo not be harmed. The spokesman added that th had arrested over 100 membes of the EPRLF, TEL and PLOT after the grenade attack on 'Kittu', wh had left him critically wounded.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

(20)

### ❖ 4,000 தமிழர்கள் பிணக்குவியல்

### ❖ இலங்கையில் தமிழ் இன அழிப்பு

# உயர் அதிகாரிகளுடன் ராஜீவ் அவசர ஆலோசனை

தினசரி 28-5-87

## அடுத்த கட்ட நடவடிக்கை என்ன?

## யாழ்ப்பாணத்தில் துருப்புகள் இறங்கியது

புதுடெல்லி, மே 28— இலங்கையில் கடந்த இரண்டு நாட்களாக 20 ஆயிரம் சிங்கள துருப்புகள் யாழ்ப்பாணத்தை முற்றுகையிட்டு தாக்குதல்நடத்தி வருவது குறித்து உயர்மட்ட அதிகாரிகளுடன் பிரதமர் ராஜீவ் அவசர ஆலோசனை நடத்தினார்.

ஏற்கனவே இலங்கை அரசு முழுவேகத்தில் முப்படைகளையும் ஈடுபடுத்தி யாழ்ப்பாணத்தை தாக்கி வருவதை இந்திய அரசு கண்டனம் செய்து இருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது.

பொதுமக்கள் பள்ளிகளிலும், கோவில்களிலும் அடைக்கலம் புகுந்திருக்கின்றனர்.

ஊரடங்கு உத்தரவு நீடிக்கப்படுமானால் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பட்டினி கிடந்து சாகும் நிலை ஏற்படும்.

மேலும் தமிழர்கள் வீடுகளை தரைமட்டமாக்க விமானங்கள் தொடர்ந்து குண்டு வீசி தாக்கி வருகின்றன. பீரங்கி தாக்குதல தொடர்ந்து நடத்தப்பட்டு வருவதால் 120 பேருக்கு மேலாக தமிழர்கள் உயிரிழந்திருப்பதாக அங்கிருந்து வரும் தகவல் தெரிவிக்கிறது.

இலங்கைராணுவம் ஹெலிகாப்டர் பக்க பலத்துடன் யாழ்ப்பாணத்தில் தாக்குதல் நடத்தி கொண்டு, அங்குலம் அங்குலமாக முன்னேறி வருவதாக ராணுவ அதிகாரி ஒருவர் சொல்லி இருக்கிறார்.

**கிராமங்கள் காலி**

பொதுமக்கள் உயிரிழந்திருக்கக் கூடும் என்று ராணுவ அதிகாரியே ஒப்புக்கொள்வதாக செய்திகள் கூறுகின்றன.

ஊரடங்கு உத்தரவு பற்றியும் தாக்குதல் நடைபெற இருப்பது குறித்தும் விமான மூலம் துண்டு பிரசுரங்கள் வீசப்பட்டதையடுத்து கிராம மக்கள் அவசரம்அவசரமாக புகலிடம் தேடி ஓட்டம் பிடித்ததால் அத்தியாவசிய தேவையான உணவுப் பொருட்கள் எதையும் அவர்கள் எடுத்துச் செல்லவில்லை.

பீரங்கித் தாக்குதல் காரணமாக தமிழர்கள் கொன்று குவிக்கப் படுகிறார்கள்.

அளவிலான தாக்குதலை தொடர்ந்திருப்பதாக ராணுவ அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

இரண்டாயிரத்து ஐநூறு துருப்புகள் பீரங்கிகளுடன் யாழ்ப்பாணத்தின் வடக்கு பகுதி கடற்கரையில் இறக்கப்பட்டுள்ளனர். வல்வெட்டி துறை, காங்கேசன் துறை, பலாலி, கட்டுவான் குரும்பசெட்டி, வாசவிலான் ஆகிய இடங்களை பிடிக்க முப்படைகளும் காட்டுமிராண்டித் தனமான தாக்குதலில் இறங்கி இருக்கின்றன.

விடுதலைப்புலிகள் கண்ணிவெடி தாக்குதல் அவர்களை முன்னேறவிடாமல் தடுத்துக் கொண்டிருக்கிறது,

வல்வெட்டித்துறை மீது கப்பற்படை பயங்கர தாக்குதல் நடத்தி வருவதாக செய்திகள் வெளியாகி இருக்கின்றன.

செவ்வாய்கிழமை முதல் இலங்கையின் முப்படைகளும் முழுவேகத்தில் யாழ்ப்பாணம் மீது தாக்குதல் நடத்திவருகின்றன இந்த தாக்குதல் காரணமாக ஏராளமான பொதுமக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் தவிர விடுதலைப்புலிகள் பெரும்பாலும் பாதிக்கப்படவில்லை.

இலங்கை ராணுவத்தை முழு மூச்சுடன் அவர்கள் எதிர்த்து போராடி வருகிறார்கள்.

விடுதலைப்புலிகள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை பிடிப்பதாகக் கூறிக்கொண்டு அப்பாவித் தமிழர்களை இலங்கை ராணுவம் அழித்து வருவது தமிழினத்தை பூண்டோடு ஒழிக்கவே.

**பிரதமர் ஆலோசனை**

இலங்கை அரசின் காட்டுமிராண்டித்தனமான தாக்குதலை நிறுத்த அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி உயர் அதிகாரிகளுடன் பிரதமர் ராஜீவ் நேற்று ஆலோசனை நடத்தினார். இதுவரை 4000 தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டிருப்பது குறித்தும் தொடர்ந்து இலங்கை ராணுவம் தாக்குதல் நடத்துமானால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கும் என்றும் அச்சம் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

இதுகுறித்துபிரதமர் உயர் அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினார்.

விரைவில் இந்தியா தலையிடாவிட்டால் யாழ்ப்பாண தமிழ் இனம் அழிக்கப்பட்டுவிடும் என்று அச்சம் தெரிவித்தார்.

இலங்கை தமிழர்களுக்கு தமிழக மக்கள் முழு ஆதரவு தர வேண்டும் என்று ஈ.பி.ஆர்.எல்.ஏப். தலைவர் பத்மநாபா கோரியிருக்கிறார்.

தமிழர்களை அடியோடு ஒழித்துக்கட்ட இலங்கை அரசு முடிவு செய்துவிட்டது விமானம், தரைப்படை ஆகியவைகள் ஏககாலத்தில்யாழ்ப்பாணம்மீது தாக்குகொடூரமாக நடத்திவருகிறது. நூற்றுக்கணக்கான அப்பாவி தமிழர்கள்கொன்று குவிக்கப்பட்டுள்ளனர்.


பேச்சுவார்த்தை மூலம் தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண உலகம்முழுவதும்கோரிக்கை விடுத்ததை இலங்கை அரசு நிராகரித்து விட்டதையே இலங்கை தாக்குதல் ஊர்ஜிதப்படுத்துகிறது என்று ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் பத்மநாபா ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

EELAM PEOPLE'S INFORMATION CENTRE
POST BAG NO. 5551
MADRAS • 600 094.
INDIA

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

THE HINDU 5-6-87

## INDIA'S OPERATION AIR RELIEF FOR JAFFNA PENINSULA




This map shows the approximate flight path for the relief mission by five Indian Air Force AN-32 aircraft escorted by four Mirage-2000 planes over the Jaffna peninsula on Thursday. Manoj Joshi, THE HINDU's Special Correspondent, who was on one of the transport aircraft plotted this course. The dropping zone for this plane was approximately three miles north of Jaffna town, near the Kokuvil railway station. It is not an area controlled by the Sri Lankan armed forces. The map shows the areas bombed in the military offensive by the Sri Lankan Government and the Sri Lankan naval presence.

5-6-87 INDIAN EXPRESS

# MGR thanks Centre

By Our Staff Reporter

Chief Minister M. G. Ramachandran has welcomed the paradropping of food and medicine in Jaffna.

In a statement on Thursday, he said that on behalf of the State Government and the people of Tamil Nadu and on his own behalf, he thanked Prime Minister Rajiv Gandhi for this "bold action."

He said his Government and the Tamil people would extend their full support to the Union Government in its efforts to mitigate the sufferings of Tamils in Sri Lanka.

DMK president M. Karunanidhi said the paradropping of food and other relief materials to beleaguered Jaffna Tamils should only be the beginning of the firm steps the Indian Government had to take.

"There is no way to save the Sri Lanka Tamils other than by taking those firm steps," he said.

Nine Sri Lanka Tamil groups in Madras, including some militants, in a statement, thanked the Centre for the "timely assistance" to Jaffna Tamils.

Signed by the main groups Eelam People's Revolutionary Liberation Front (EPRLF), People's Liberation Organisation of Tamil Eelam (PLOT), Tamil Eelam Army (TEA), Tamil Eelam Liberation Organisation (TELO), Tamil United Liberation Front (TULF), Tamil Eelam Liberation Front (TELF) and the Eelam National Democratic Liberation Front (ENDLF), among others, the statement said the other areas in Sri Lanka's northern and eastern provinces also needed such help.

The people of India and the Centre should further extend all humanitarian aid to the Sri Lanka Tamils, the statement appealed.

'A fitting reply': The All-India Congress-I Committee described as "timely and positive humanitarian action" the government's decision to airdrop relief supplies in the beleaguered Jaffna peninsula. (PTI reports from Delhi).

"We cannot be a silent spectator to the genocide that is taking place in Jaffna and its surroundings," AICC-I general secretary A. K. Anthony said in a statement.

இந்திய அரசுக்கு நன்றி.

பிரதான ஈழவிடுதலை இயக்கங்களான EPRLF, TELO, PLOT, TULF, TEA, TELF, ENDLF ஆகிய அமைப்புகள் ஒன்று சேர்ந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு உரிய நேரத்தில் இந்திய அரசு செய்த மனிதாபிமான உதவிக்கு நன்றி கூறியதோடு ஈழத்தின் மற்றைய பகுதிகளுக்கும் பெருமளவு உதவிகள் தேவைப்படுவதாக குறிப்பிட்டதோடு இந்திய மக்களும் இந்திய அரசும் தங்களது மனிதாபிமான உதவிகளை தொடர்ந்து நல்கவேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளனர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5-6-87

# இலங்கை பிரச்சினையில் இந்தியாவுக்கு சோவியத் ஆதரவு

மக்கள் குரல்

மாஸ்கோ, ஜூன். 5:
இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவின் நிலைக்கு சோவியத் தலைவர் கோர்ப்பசேவ் பூர்ண ஆதரவு தெரிவித்திருக்கிறார்.

கோர்ப்பசேவும் என்.டி. திவாரியும் நேற்று கிரெம்ளினில் ஒன்றரை மணி நேரம் பேச்சுவார்த்தை நடத்தினார்கள். யாழ்ப்பாண மக்களுக்கு உணவு, மருந்து உதவிகளை அவசரமாக விமானத்தில் அனுப்ப நேர்ந்தது குறித்து அப்போது விவாதிக்கப்பட்டது.

மனிதாபிமான அடிப்படையில் ஈழ தமிழர்களுக்கு படகு மூலம் உதவி அனுப்ப முனைந்தோம். கொழும்பு அந்த உதவியை நிராகரித்து விட்டதால், முற்றிலும் சமாதான அடிப்படையில் விமானங்கள் மூலம் உதவி அனுப்பினோம் என்று திவாரி, கோர்ப்பசேவிடம் விளக்கினார்.

இலங்கை அரசு, மைனாரிட்டி மக்கள் மீது வன்முறையை ஏவி விட்டிருப்பதை உலகின் கவனத்துக்குக் கொண்டு வருவதில் திவாரியின் இப்பணி ஒரு முக்கிய முயற்சியாகும்.

இலங்கையிலிருந்து இந்தியாவுக்குள் வரும் அகதிகள் தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவது பற்றியும் திவாரி எடுத்துக் கூறினார்.

பிரதமர் ராஜீவ் காந்தியின் கடிதம் ஒன்றையும் திவாரி, கோர்ப்பசேவிடம் கொடுத்தார். முக்கிய சர்வதேச பிரச்சினைகளில் இந்தியாவின் நிலையை ஆதரிப்பதாக கோர்ப்பசேவ் உறுதி கூறினார்.

### ஐ.நா. செயலர் கவலை

இந்தியாவின் உதவியை மறுப்பதால இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையே வளர்ந்து வரும் மோதல் சூழ்நிலை குறித்து ஐக்கிய நாடுகளை சபையின் பொதுச் செயலாளர் பீரஸ்-டி கெல்லர் கவலை தெரிவித்து இருக்கிறார்.

இரு தரப்பிலும் உள்ள நிலவரம் பற்றி மிகுந்த கவலையுடன் இருக்கிறேன், இது குறித்து கவலை அடைந்து இருக்கிறேன் என்று அவர் தெரிவித்திருக்கிறார். நிலைமை மேலும் மோசமடையாமல் தவிர்க்கும்படியும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறார். இலங்கை இனப்பிரச்சினையில் சமாதான பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண்பது சாத்தியமே என்று அவர் கூறியுள்ளார்.

### அமெரிக்க செனட்டர் கண்டனம்

இலங்கையில் நடைபெறும் வன்முறை, இனப்படுகொலைக்கு அமெரிக்க வெளியுறவு கமிட்டி உறுப்பினரும் செனட்டருமான மார்வின் டிமெல்லே கண்டனம் தெரிவித்து இருக்கிறார்.

தமிழ் பகுதிகளில் இலங்கை ராணுவம் மேற்கொண்ட தாக்குதல் குறித்து நேரில் ஆராய அமெரிக்காவிலிருந்து ஒரு குழுவினை அனுப்ப வேண்டும் என்றும் அவர் வற்புறுத்தியிருக்கிறார்.

### நடவடிக்கை ஏன்? உலக தலைவர்களுக்கு ராஜீவ் கடிதம்

தத்தளிக்கும் யாழ்ப்பாணம் தமிழர்களுக்கு விமானங்கள் மூலம் உணவுப் பொருட்களையும், மருந்துப் பொருட்களையும் போடும் நிலைமைக்கு தள்ளப்பட்டது ஏன் என்பதை விவரமாக விளக்கி அதன் பின்னணியைத் தெளிவாக்கி, உலக தலைவர்கள் ஒரு சிலருக்கு பிரதமர் ராஜீவ் இன்று கடிதம் எழுதவிருக்கிறார்.

கருத்து வேறுபாடு ஏதும் இருந்தால், அவற்றை இந்த கடிதம் போக்கி விடும் என்று விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைத் தீவில் தமிழர் பிரச்சினைக்கு சுமுகமான ஒரு தீர்வு காண கடந்த காலத்தில் இந்திய அரசு மேற்கொண்டு வந்திருக்கும் நடவடிக்கைகள் அக்கடிதத்தில் ராஜீவ் நினைவு கூர்ந்திருப்பார் என்றும் சொல்லப்படுகிறது. யாழ்ப்பாணம் தமிழர்களுக்கு இந்தியா முழுவதிலும் மிகுந்த இரக்க உணர்வு உள்ளது. இந்நிலையில் தவியாய் தவிக்கும் மக்களுக்கு தக்க நேரத்தில் இப்படி உதவிக்கரம் நீட்டுவது தான் நியாயம் என்று உணரப்பட்டது என்பதையும் உலகத் தலைவர்களிடம் அவர் விளக்கமாக குறிப்பிடுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### வெளிநாட்டு தூதர்களுடன் தொடர்பு

இதற்கிடையில், ஐ.நா.வில் இந்தியாவின் நிரந்தர பிரதிநிதியான சி.ஆர். காரேகானே, அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட வெளிநாட்டு தூதர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களிடம் யாழ்ப்பாணத்தில் விமானங்கள் மூலம் உணவுப் பொருட்கள், மருந்து போடப்பட்டது ஏன் என்பது குறித்து விவரமாக விளக்குமாறு இந்திய அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

---

தினமணி

24-5-87.

## இலங்கை அரசுக்கு ஈ.பி.ஆர்.எல்.எப். வேண்டுகோள்

சென்னை, மே 23—
யாழ்ப்பாணத்தில் மேற்கொண்டுள்ள ராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும், சுமுகமான உடன்பாடு ஏற்பட இந்திய அரசு எடுத்து வரும் முயற்சிகளுக்கு இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும் என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி.ஆர்.எல்.எப்) பொதுச் செயலாளர் கே. பத்மநாபா கேட்டுக் கொண்டுள்ளார்.

பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க இந்திய அரசு, இலங்கை அரசை வற்புறுத்த வேண்டும் என்றும் அவர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியுள்ளார்.

பேச்சுவார்த்தைக் குழுவில் இலங்கையின் கம்யூனிஸ்டு கட்சி, ஸ்ரீலங்கா மகாஜன கட்சி, நவ சமாஜ கட்சி சாம சமாஜ கட்சி ஆகிய கட்சிகளின் பிரதிநிதிகளையும் சேர்க்க வேண்டும் என்றும் இலங்கை அரசை அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

சில ஈழப் போராளி இயக்கத்தினர் சிங்களர்களைக் கொலை செய்வதை உடனே நிறுத்த வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

---

## சிங்கள ராணுவம் வெறித்தனம்:

# ஹெலிகாப்டர் மூலம் தாக்குதல்: 75 பேர் பலி

(20-5-87)

# குண்டுக்கு பயந்து பதுங்கு குழிகளில் வாழும் தமிழர்கள்

www.tamilarangam.net

# கொழும்பு சிறையில் சிங்கள கைதிகள் தாக்கி 6 தமிழர்கள் பலி

தினமணி 23-4-87

கொழும்பு, ஏப். 22— கொழும்பு சிறையில் புதன்று காலையில் சிங்களக் கைதிகள் பயங்கர ஆயுதங்களுடன் தமிழ்க் கைதிகளைத் தாக்கியதில் குறைந்தபட்சம் 6 தமிழ்க் கைதிகள் உயிரிழந்தனர்.

கலவரத்தில் ஈடுபட்ட சிங்களக் கைதிகள் தமிழர்கள் சிறையில் வைக்கப்பட்டிருந்த கட்டிடத்துக்கும் தீ வைத்தனர். இக்கலவரத்தை அடக்குவதற்கு ஈடுபடுத்த... ராணுவத்தினர் கூட... 2 சிங்களர் காயமடைந்தனர். கொழும்பு பஸ் நிலைய வெடிகுண்டு சம்பவத்தில் 150 பேர் உயிரிழந்ததற்கு பழி வாங்கும் செயலாக சிங்களக் கைதிகள் இவ்விதம் தாக்குதலில் ஈடுபட்டதாக நம்பப்படுகிறது.

சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளையும் தாக்க சிங்களக் கைதிகள் முயற்சித்தனர்.

கொழும்பில் வெளிக்கடை சிறைச்சாலையில் இச்சம்பவம் நடந்தது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து இச்சிறையில் இருந்த தமிழ்க் கைதிகள் அனைவரும் கொழும்பில் உள்ள ஆனந்தா கல்லூரி காம்பவுண்டுக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

வெளிக்கடை சிறையில் 6 தமிழ்க் கைதிகள் அடித்துக் கொல்லப்பட்ட சம்பவத்தை இலங்கை ராணுவ அதிகாரி ஊர்ஜிதப்படுத்தினர்.

மதுரையில் உள்ள தமிழ் தகவல் கேந்திரமும் இச்சம்பவம் பற்றிய தகவல்களை தெரிவித்துள்ளது.

## முந்தைய சம்பவம்

1983ம் ஆண்டில் இதே வெளிக்கடை சிறையில் சிங்களக் கைதிகள் கலவரத்தில் ஈடுபட்டு போராளி தலைவர்களான குட்டிமணி, தங்கதுரை உட்பட 57 தமிழ்க் கைதிகளைக் கொன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கைதிகள் சிறை அதிகாரி ஒருவரைப் பிடித்து அவரை அடித்ததாகவும் ராணுவ அதிகாரி தெரிவித்தார்.

வெளிக்கடை சிறையில் 1000க்கும் அதிகமான சிங்கள கைதிகள் உள்ளனர்.

சிங்களக் கைதிகள் கலவரத்தில் ஈடுபட ஆரம்பித்ததும் ராணுவம் அழைக்கப்பட்டது. சுமார் 200 தமிழ்க் கைதிகளை பத்திரமான இடத்துக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது என்றும், ஆனால் அதற்குள்ளாக 6 தமிழ்க் கைதிகள் அடித்துக் கொல்லப்பட்டதாகவும் அந்த அதிகாரி கூறினர்.

சிங்களக் கைதிகள் தமிழ்க் கைதிகளை பயங்கர ஆயுதங்களால் தாக்கியதில் 6 தமிழர் இறந்தனர் என தங்களுக்குக் கிடைத்த தகவல்கள் கூறியதாக மதுரையில் உள்ள தமிழ் தகவல் கேந்திரம் தெரிவித்தது.

வெறிகொண்ட சிங்களக் கைதிகள் 200 தமிழ்க் கைதிகள் வைக்கப்பட்டிருந்த கட்டிடத்துக்குள் புகுந்து தாக்க முற்பட்டதாகவும், அப்போது அவர்கள் அக்கட்டிடத்துக்குத் தீ வைத்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளை சிங்களக் கைதிகள் தாக்க முற்பட்டபோது சிறைக்காவலர்கள் அம்முயற்சியைத் தடுத்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

# டக்ளஸ் தேவானந்தா: ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்திலிருந்து நீக்கம்

மக்கள் குரல் 17-5-87

சென்னை,

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியிலிருந்து அதன் மத்திய கமிட்டி உறுப்பினராக இருந்து வந்த டக்ளஸ் தேவானந்தா வெளியேற்றப்பட்டார்.

மத்திய கமிட்டியின் முடிவுகளுக்கு கட்டுப்படாமல் தன்னிச்சையாக செயல்பட்டு வந்தாலும், ஸ்தாபன விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலும், ஸ்தாபன ஒருமைப்பாட்டுக்கு ஊறுவிளைவிக்கும், குந்தகம் ஏற்படுத்தும்படியான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலும், ஸ்தாபன ஜனநாயக துஷ்பிரயோகம் செய்து அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டதாலும் இவர் நீக்கப்பட்டிருப்பதாக விடுதலை முன்னணி அறிவித்தது.

சூளைமேட்டு துப்பாக்கி சூடு சம்பவம் நடந்ததைத் தொடர்ந்து இவரை இடைநிறுத்திய காலத்திலும் கூட இவர் ஸ்தாபன விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்பதையும் மத்திய கமிட்டி கவனத்தில் எடுத்துக் கொண்டது.

இதன்படி டக்ளஸ் தேவானந்தாவை சகல பொறுப்புகள், செயல்பாடுகளிலிருந்தும் மாத்திரமல்லாமல் ஸ்தாபனத்தின் உறுப்பினர் என்னும் நிலையில் இருந்தும் முழுமையாக வெளியேற்றுவதாக தீர்மானிக்கப்பட்டது என்று அதன் செயலாளர் நாயகம் பத்மநாபா தெரிவித்தார்.

### படுகொலை நடந்த பகுதியில்

# ஆயுதப் பயிற்சி பெற்ற 5 ஆயிரம் சிங்களரை குடியமர்த்த திட்டம்

தினமணி 20-4

கொழும்பு, ஏப். 19— இலங்கையில் திருகோணமலை மாவட்டத்தில் சுமார் 5 ஆயிரம் சிங்களர்கள் குடியமர்த்தப்பட்டு அவர்களுக்கு ஆயுதங்கள் சப்ளை செய்யப்படும் என்று இலங்கை அரசு ஞாயிறன்று கூறியது.

கடந்த வெள்ளியன்று பஸ் பயணிகள் படுகொலை சம்பவம் நடந்த இடத்திற்கு அருகிலேயே சிங்களர் குடியிருப்பு அமைக்கப்படும். அங்கு குடியேறும் சிங்களர்க்கு துப்பாக்கிகள் போன்ற ஆயுதங்களை அரசு சப்ளை செய்யும். அத்துடன் ஆயுதங்களைப் பயன்படுத்துவதற்கான பயிற்சியை ராணுவத்தினர் அவர்களுக்கு அளிப்பார்கள். படுகொலை செய்தவர்களைத் தேடும் முயற்சியில் 5 ஆயிரம் ராணுவத்தினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாக ஒரு உயர் ராணுவ அதிகாரி கூறினர்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயிரக்கணக்கான ராணுவத்தினர் குவிப்பு

# யாழ்ப்பாணத்தில் பயங்கர குண்டுவீச்சு:

மக்கள் குரல்
20-5-87

# அப்பாவி தமிழர்கள் பலி

சென்னை, மே. 20:
யாழ்ப்பாணத்தில் ஆயிரக்கணக்கான ராணுவத்தினர் குவிக்கப்படுகிறார்கள. போருக்கு ஆயத்தமாகிறார்கள். குண்டுவீச்சு தாக்குதலும் நடத்துகிறார்கள்.

யாழ்ப்பாணத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர இலங்கை அதிபர் ஜெயவர்த்தனே திட்டமிட்டுள்ளார். இதன் ஒரு அம்சமாக யாழ்ப்பாணம்-கண்டி வீதியில் ராணுவ முகாம் அமைப்பது எனவும், முதலில் அதற்காக கொழும்பு-கண்டி வீதியை போராளிகள் நடமாட்டம், போக்குவரத்து ஆகியவை இல்லாமல் செய்ய திட்டம் திட்டப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக ஆனையிரவு ராணுவ முகாமில் இருந்து 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பளை என்னுமிடத்தில் புதிய ராணுவ முகாமை அமைப்பதென நேற்று கொழும்புவில் நடந்த பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத் முதலி தெரிவித்தார்.

பளை என்னும் கிராமம் போராளிகள் செல்வாக்கு மிகுந்த இடம். இங்கு பெரும் அளவு தென்னை மரத் தோட்டங்களும், காடுகளும் இருப்பதால் போராளிகள் தங்கள் பிரதான பாதுகாப்பு இடமாக இதை வைத்திருந்தனர்.

## புதிய ராணுவ முகாம்

இப்போது இங்கு புதிய ராணுவ முகாம் அமைப்பதற்காக 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ராணுவத்தினர் ஆனையிரவு ராணுவ முகாமுக்கு வந்துள்ளனர். பளை கிராமத்தில் மறைந்துள்ள போராளிகளை அங்கிருந்து விரட்ட குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிகாப்டர்களும் குண்டுவீச்சு தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன. அதே நேரத்தில் தொடர்ந்து ஆயிரக்கணக்கான ராணுவத்தினர் கவச வாகனங்கள், துப்பாக்கிகள் சகிதம் ஆனை இரவை நோக்கி வந்த வண்ணம் இருக்கிறார்கள்.

## தமிழர்கள் சாவு

பாழ்பாணத்தில் ராணுவம் மேற்கொண்டுள்ள குண்டுவீச்சு தாக்குதலால், தினமும் அப்பாவி மக்கள் உயிரிழக்கிறார்கள். இது வாடிக்கையாகி விட்டது. இந்த தாக்குதலால் போராளிகளின் கவனம் அந்த ப குதிக்கு செல்கிறது. அதே நேரத்தில் பளையில் ராணுவ முகாம் அமைக்கும் பணியையும் இலங்கை அரசு செய்து வருகிறது.

ஈழமக்கள் செய்தி தொடர்பு நிலையம் இதனை தெரிவித்தது.

ஈழப்போராளிகளை பலவீனப்படுத்த

# யாழ். நகரில் ராணுவ முகாம் அமைக்க முடிவு

# அதுலத் முதலி அறிவிப்பு

## புதிய ராணுவ முகாமை அமைக்க இலங்கை அரசு முடிவு

ஆனையிறவு ராணுவ முகாமிலிருந்து எட்டு கிலோமீட்டர் தொலைவிலுள்ள பளை என்னுமிடத்தில் புதிய ராணுவ முகாம் ஒன்றை அமைக்க இலங்கை அரசு முடிவு செய்துள்ளது என்று ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்டத்தை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர கண்டி வீதியில் முகாமை அமைப்பது எனவும் முதலில் அதற்காக கொழும்பு கண்டி வீதியை போராளிகளின் நடமாட்டம், போக்குவரத்து ஆகியவற்றிலிருந்து விடுவிக்கவும் இலங்கை திட்டமிட்டுள்ளது.

கடந்த செவ்வாயன்று கொழும்பில் நடைபெற்ற பாதுகாப்பு கவுன்சில் கூட்டத்தில் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அதுலத் முதலி பேசுகையில் முதற்கட்டமாக பளை என்ற இடத்தில் ராணுவ முகாம் அமைக்கப்படும் என்று தெரிவித்தார் என்றும் ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் கூறியுள்ளது.

பளை கிராமம் போராளிகளின் செல்வாக்கு மிகுந்த இடம். இக்கிராமத்துடன் இணைந்ததாகப் பெருமளவி ) தென்னை மரத்தோட்டங்களும், காடுகளும் இருப்பதால் போராளிகள் தங்கள் பிரதான பாதுகாப்புப் பிரதேசமாக இவ்விடத்தை உபயோகித்து வருகின்றனர்.

இப்போது இவ்விடத்தில் புதிய ராணுவ முகாம் அமைப்பதற்காக 5 ஆயிரத்திற்கும் அதிகமான ராணுவத்தினர் ஆனையிறவு முகாமை வந்தடைந்துள்ளனர். அதே வேளையில் பளை கிராமத்தில் மறைந்துள்ள போராளிகளை அங்கிருந்து விரட்டுவதற்காக குண்டு வீச்சு விமானங்களும், விமானப்படை ஹெலிகாப்டர்களும் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

ஈழத்து செய்திகளை உடனுக்குடன் அறிந்து-
கொள்ள தொடர்பு
கொள்ள வேண்டிய
தொலைபேசி எண்
031- 587995.

## போராளிகளை திசை திருப்பி தாக்குதல்

யாழ்ப்பாணம் எங்கும் ராணுவத்தினரின் தாக்குதல்கள் பல இடங்களில் தொடர்ந்து நடைபெறுவதால் போராளிகளின் கவனம் அவ்விடங்களில் திசை திருப்பப்பட்டுள்ளது. அதே நேரத்தில் பளையில் ராணுவ முகாம் அமைக்கும் வேலையும் இலங்கை அரசால் துரிதப்படுத்தப்பட்டுள்ளது என்றும் ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் தெரிவித்துள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஈ.பி.ஆர்.எல்.எப். கண்டனம்

23-4-87 தினமணி

கொழும்பு பஸ் நிலையத்தில் கார் குண்டு வெடிப்பு சம்பவத்துக்கு யார் காரணமாக இருந்தாலும், அது கண்டனத்துக்கு உரியது என்றும், இந்தப் படுகொலை 'அதிர்ச்சி அளிப்பதாக' உள்ளது என்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.) தலைவர் க. பத்மநாபா புதன்று வெளியிட்ட ஒரு அறிக்கையில் கூறியுள்ளார். —

'தொடர்ச்சியான இப் படுகொலைகள் ஈழ விடுதலைப் போராட்டத்தின் அடிப்படை லட்சியத்தையே சிதைத்து, திசைமாற்றிவிடும். மேலும், சிங்கள, தமிழ் இனவாதிகள் கைகளை ஓங்கச் செய்ய செய்துவிடும்' என்றும் அவர் கூறியுள்ளார்.

படுகொலை[illegible] மேற்கொள்ள இலங்கை அரசுக்கு இது ஒரு உந்துதலை அளிக்கும் என்றும், சர்வதேச ரீதியில் அதனது இன ஒழிப்புச் செயலுக்கு நியாயம் கற்பித்துவிடும் என்றும் பத்மநாபா அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இது போன்ற அப்பாவி மக்களைக் கொல்லும் நடவடிக்கைகளில் யாரும் ஈடுபட வேண்டாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

## கொழும்பு பஸ் நிலைய வெடிகுண்டு சம்பவம்: பிளாட் கண்டனம்

சென்னை, ஏப். 22—

கொழும்பில் நூற்றுக்கணக்கான உயிர்களை பலி கொண்ட பஸ் நிலைய வெடி குண்டு சம்பவத்துக்கு' தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (பிளாட்) கண்டனம் தெரிவித்துள்ளது.

'பிளாட்' அமைப்பின் செயலதிபர் உமாமகேஸ்வரன் இது தொடர்பாக ஓர் செய்திக் குறிப்பை வெளியிட்டுள்ளார்.

இது போன்ற செயல்கள் இலங்கை அரசுக்கு வலிமை சேர்த்துவிடுவதுடன், சிங்கள-தமிழர் பகைமையை முற்றச் செய்துவிடும் என்றும் அவர் அந்த குறிப்பில் கூறியுள்ளார்.

கொழும்பு பஸ் நிலையத்தில் அப்பாவி மக்கள் மீது தமிழீழ விடுதலை புலிகள் காட்டுமிராண்டித்தனமாக தாக்குதல் நடத்தியதாக 'பிளாட்' அமைப்பின் இன்னொரு கோஷ்டி கண்டனம் தெரிவித்துள்ளது.

அந்தக் கோஷ்டியின் அமைப்புச் செயலாளர் ஆதவன் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், மேற்சொன்ன கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

ஜெயவர்த்தனே மிரட்டலுக்கு அடிபணிய கூடாது

# முப்படையினரின் பாதுகாப்புடன் பண்டங்களை அனுப்பு

மக்கள் குர 4-6-87

## எம். கல்யாணசுந்தரம் அறிக்கை

சென்னை, ஜுன். 4:

ஜெயவர்த்தனேயின் அச்சுறுத்தலுக்கு பணிந்து விடக்கூடாது. நமது முப்படையினரின் பாதுகாப்புடன் இலங்கை தமிழர்களுக்கு வேண்டிய அவசியமான பண்டங்களை அனுப்ப வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் எம். கல்யாணசுந்தரம் கேட்டுக் கொண்டுள்ளார்.

நமது மனிதாபிமான உதவிக்கு எதிராக ஜெயவர்த்தனே அரசு ராணுவ நடவடிக்கைகளை எடுக்குமானால் இலங்கை அரசுதான் குற்றவாளி கூண்டில் நிறுத்தப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எம். கல்யாணசுந்தரம் ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அதில் அவர் கூறியிருப்பதாவது:—

ஜெயவர்த்தனேயின் ராணுவ கொடுமைகளை எதிர்த்து போராடுகின்ற ஈழ தமிழ் மக்களுக்கு உணவு, மருந்துப் பொருட்கள் ஆகியவற்றை இந்திய அரசு நேரடியாக அனுப்புவதற்கு முடிவு எடுத்துள்ளது. இந்த முடிவை மனித நேயமிக்க அனைத்து மக்களுக்கும் வரவேற்கிறார்கள். ஜெயவர்த்தனேயின் எந்த அச்சுறுத்தலுக்கும் அடிபணிந்து விடக்கூடாது. எதுவரினும் நமது முப்படையின் பாதுகாப்புடன வாழ்க்கைக்கு அவசியமான பண்டங்களை ஈழ மக்களுக்கு கொண்டு போய் சேர்க்க வேண்டிய கடமை இந்திய அரசை சாரும். தமிழ் மக்கள் மட்டுமன்றி அனைத்து இந்திய மக்களும் இந்திய அரசின் இந்த நடவடிக்கை ஆதரித்து நிற்பார்கள். யாழ்ப்பாண மக்களை காப்பாற்ற வேண்டியது இந்திய அரசின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

இந்த மனிதநேய கடமைக்கு எதிராக ஜெயவர்த்தனே அரசு ராணுவ நடவடிக்கைகளை எடுக்குமானால் அந்த இலங்கை அரசுதான் குற்றவாளி கூண்டில் நிறுத்தப்படும். ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகள் அனைவரும் ஒன்று சேர்ந்து இலங்கை ஜெயவர்த்தனே அரசின் ராணுவ கொடுமைகளை கண்டிக்க வேண்டும். இந்திய அரசின மனிதநேயமிக்க உதவியை வரவேற்க வேண்டும். ஈழ தமிழர்களின் போராட்டத்திற்கு தமிழ் மக்கள் ஒன்று திரண்டு ஒருமைப்பாடு தெரிவிக்க வேண்டும்.

இவ்வாறு கல்யாணசுந்தரம் அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில குழு சார்பில் ஏ.எம். கோபு ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

இந்திய அரசு மனிதாபிமான அடிப்படையில் ஆயுத படையுடன் இல்லாமல் செஞ்சிலுவை சங்கத்தின் மூலம் உணவு, மருந்து போன்ற அத்தியாவசிய பொருள்களை பாதிக்கப்பட்ட இலங்கை தமிழர்களுக்கு அளிக்க முன்வந்ததை இலங்கை இனவெறி அரசு தடுத்தது வன்மையாக கண்டிக்கத்தக்கது. இது ஒரு ஆத்திரமூட்டும் செயல் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் இந்த நிவாரண படகுகள் மீது ராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு மேற்கொள்ள முயற்சிப்பது மிக கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்று இலங்கை அரசை எச்சரிக்கிறோம் என்று ஏ.எம். கோபு கூறியுள்ளார்.

உணவு சப்ளையை அனுமதித்து ராணுவத்தை தமிழர் பகுதிகளிலிருந்து வாபஸ் வாங்கி ஒரு இணக்கமான அரசியல் தீர்வு கண்டு தமிழர்களும், சிங்களவர்களும் அனைத்து ஜனநாயக ஒரு அரசியல் உரிமைகளுடன் ஒற்றுமையாக, கவுரவமாக சம அந்தஸ்துடன் வாழ்வதற்கு வழிகாண இலங்கை அரசை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநில குழு கேட்டுக் கொள்வதாகவும் அவர் கூறியிருக்கிறார்.

---

தினமணி 5-5-87

## மட்டக்களப்பில் 300 பேர் கைது

சென்னை, மே 4—

இலங்கையில் மட்டக்களப்பு நகரைச் சுற்றி வளைத்த இலங்கை போலீஸ் படையினர் சுமார் 300 பேரை கைது செய்து, ஊரணி என்ற இடத்திலுள்ள முகாமில் சிறைவைத்துள்ளனர் என்று ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம் தெரிவிக்கிறது. அவர்கள் இது வரையில் விடுவிக்கப்படவில்லை என்றும் அவர்களின் செய்திக் குறிப்பு கூறுகிறது.

அம்பாறை மாவட்டம் சவளக்கடை அதிரடிப்படை முகாமையும், கல்முனை போலீஸ் நிலையத்தையும் இணைக்கும் கிட்டங்கிப் பாலம், ஞாயிறன்று இரவு போராளிகளால் தகர்க்கப்பட்டது எனறும் அக் குறிப்பு தெரிவிக்கிறது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போராளிகள் மீதான தாக்குதலை நிறுத்தும்படி

# விடுதலை புலிகளை வற்புறுத்துங்கள்!

## இந்தியாவுக்கு ஈபிஆர்எல்எப் வேண்டுகோள்

சென்னை: ஏப்: 7

சக போராளி இயக்கங்கள் மீது கட்டவிழ்த்து விட்டிருக்கும் வன்முறையை நிறுத்தும்படி, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தை வற்புறுத்துமாறு, இந்தியாவை சோசலிச ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகளை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ பி ஆர் எல் எப்) கேட்டுக் கொண்டுள்ளது.

முன்னணியின் அதிகார பூர்வ பேச்சாளரான கேதீஸ்வரன் இன்று சென்னையில் அறிக்கை ஒன்றினை வெளியிட்டார். அதில் அவர், கிட்டு மீது நடந்த தாக்குதலுக்கு புலிகள் தலையில் நடைபெறும் ஆதிக்க போரேகாரணம் என்கிற உண்மையை மூடி மறைப்பதற்காக தமது முன்னணியின் தோழர்களையும், மற்ற விடுதலை இயக்கத்தினரையும் புலிகள் கொன்றுகுவித்து வருவதாகக் குறிப்பிட்டார்.

முன்னணியில் தோழர்களையும் அனுதாபிகளையும் புலிகள் இரக்கமற்ற படுகொலை செய்யும் செயலுக்கும் 1984-ம் ஆண்டு சிங்கள ராணுவம் அப்பாவித் தமிழர்கள் வேட்டையாடி கொன்ற செயலுக்கும் ஒரு வித்தியாசமும் இல்லை என்று கேதீஸ்வரன் குறிப்பிட்டார். மற்ற இயக்கங்களை ஒழித்துக் கட்டும் கொள்கையை கைவிடும்படி, இலங்கையில் வாழும் அனைத்து தமிழர்களும் விடுதலைப் புலிகளை வற்புறுத்த வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார். இதனிடையே, கிட்டு மீதான தாக்குதல் உட்பட மனித உரிமைகளை மீறும் வகையிலான அனைத்து செயல்களையும், ஈழத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தின் அமைப்பாளரான சந்திரஹாசன் கண்டனம் செய்திருக்கிறார். விடுதலை இயக்கங்கள் தங்களுக்குள்ளேயே சண்டையிட்டுக் கொள்வதால், ஈழத்தமிழர்களுக்கு இக்கட்டான நிலைமை ஏற்பட்டுள்ள இந்த நேரத்தில், சிங்கள அரசின் பலத்தையே அதிகரிக்கும் என அறிக்கை ஒன்றில் சந்திரஹாசன் குறிப்பிட்டார்.

விடுதலை இயக்கங்கள் அனைத்தும் தங்களுக்குள் இருக்கும் கருத்து வேறுபாடுகளை மறந்து, மனித உரிமை மற்றும் ஜனநாயக மரபுகளுக்கு ஏற்ற பொது நடத்தை விதி முறைக்கு இணங்க வேண்டும் என அவர் மேலும் வலியுறுத்தினர்.

---

விடுதலைப்புலிகள் தொடர்ந்து வேட்டை:

# 150 தமிழ் இளைஞர்கள் கொன்று குவிப்பு!

## கிட்டுவை தாக்கியவர்களை பிடிக்க தீவிரம்

கொழும்பு ஏப் 4

கிட்டு மீது தாக்குதல் நடத்தியவர்களை வேட்டையாடத் [illegible] விடுதலைப்புலிகள் இதுவரை 150-க்கும் மேற்பட்டோரை கொன்று குவித்திருக்கின்றனர்.

விடுதலைப்புலிகளினால் படுகொலை செய்யப்பட்டுள்ள அனைவருமே தமிழ் இளைஞர்கள் என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தில் அல்லாத இளைஞர்களை விடுதலைப்புலிகள் வேட்டையாடி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் சுற்று வட்டாரப்பகுதியில் வீடு வீடாகப் புகுந்து சோதனை நடத்தப்படுகிறது.

கடந்த செவ்வாய் முதல் ஏராளமான தமிழ இளைஞர்கள், விடுதலைப்புலிகளிடம் பிடிபட்டுள்ளனர். அவர்களை தங்களது முகாம்களுக்கு கொண்டு சென்று விசாரணைக்குப்பின் கொலை செய்து விட்டார்கள்.

இதுபோன்று பல முகாம்களில் படுகொலைகள் நிகழ்வதால், எத்தனை தமிழ் இளைஞர்கள் இதுவரை கொல்லப்பட்டிருக்கின்றனர் என்ற விபரத்தை தெரிந்து கொள்ள முடியவில்லை ஆனால் குறைந்த பட்சம் 150 இளைஞர்கள் இதுவரை படுகொலை செய்யப்பட்டிருக்கலாமென யாழ்ப்பாணத்திலிருந்து தகவல் கிடைத்துள்ளது.

முக்கியமாக, டெலோ, ஈ பி. ஆர். எல். எப், ஆகிய தங்களது போட்டி. இயக்கங்களைச் சேர்ந்தவர்களையே விடுதலைப் புலிகள் தேடித்தேடி வேட்டையாடி வருகின்றனர்.

யாழ்ப்பாண தளபதி கிட்டு மீது நடந்துள்ள தாக்குதலுக்கு டெலோ மற்றும் ஈ பி ஆர் எல் எப் ஆகிய இரு இயக்கங்களுமே காரணமென கூறப்படுகிறது எனவே இந்த இரு இயக்கத்தினரையும் புலிகள் வேட்டையாட ஆரம்பித்துள்ளனர்.

போட்டி இயக்கங்கள் மீதான படுகொலை நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதனால் கொலை செய்யப்படுவோரது எண்ணிக்கை பெருமளவு அதிகரிக்கும் அபாயம் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

---

வீடு வீடாக விடுதலைபுலிகள் சோதனை

# தமிழர் கொலை!

கிட்டு கடந்த திங்களன்று யாழ்ப்பாண நகரின் மையப் பகுதியில் வைத்து சில அடையாளம் தெரியாத நபர்களால் குண்டு வீசி தாக்கப்பட்டார். இதில் கிட்டுவின் மெய்க்காவலர்கள் 2 பேர் கொல்லப்பட்டனர். கிட்டு ஒரு கால் அகற்றப்பட்டு மருத்துவமனையில் இருந்து வருவதாக கூறப்படுகிறது.

கிட்டுவை தாக்கியவர்களை கண்டுபிடிக்க விடுதலைப் புலிகள் யாழ்ப்பாணத்தில் வீடு வீடாக சோதனை நடத்தி வருவதாக வவுனியாவை சேர்ந்த தமிழர் தகவல்கள் தெரிவித்தன.

இதுவரை அவர்கள் குறைந்த பட்சம் 160 பேரை சுட்டுக் கொன்றுள்ளனர். மேலும் 14 வியாபாரிகள் உட்பட பலரை விசாரணைக்காக அழைத்து சென்றுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அதிகாரபூர்வமற்ற [illegible] உத்தரவை விடுதலைப்புலிகள் அமல் படுத்தியிருக்கின்றனர் என்று வவுனியா தகவல்கள் [illegible].

www.tamilarangam.net

# இந்தியா 'திடீர்' நடவடிக்கை வெற்றி

## யாழ். பகுதியில் 5 விமானம் மூலம் உணவு மருந்து சப்ளை

### 4 போர் விமானங்களும் துணைக்கு சென்றன

### தாக்கினால் பதிலடி தருவோம் சிங்கள அரசுக்கு மிரட்டல்

புதுடெல்லி, ஜூன் 5 [illegible] சிங்கள அரசின் கொடுமையால் அல்லல் படும் யாழ்ப்பாணம் தமிழர்களுக்கு பாராசூட் மூலம் உணவு மற்றும் மருந்துப் பொருள்களை போடுவதற்காக இந்த

போக்குவரத்து விமானங்களில் 25 டன் எடையுள்ள பொருள்கள் அனுப்பப்பட்டன. இந்த விமானங்களில் நிருபர்களும் சென்றனர். பாதுகாப்புக்கு போர் விமானங்கள் நான்கு சென்றன.

உலக வரலாற்றில் இதற்குமுன் எப்போதுமே கண்டும் கேட்டும் இராத விதத்தில் சொந்த நாட்டு மக்களுக்கு எதிராகவே, பொருளாதார தடையும், கண்மூடித்தனமான ராணுவத் தாக்குதலும் நடத்தி வரும் காட்டு மிராண்டி சிங்கள அரசின் கொடுமைகளில் இருந்து ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற இந்தியா அடுத்தபடியாக என்ன செய்யப்போகிறது?

தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் மட்டுமின்றி உலகம் எங்கும் நேற்று முதல் எதிரொலிக்கும் கேள்வி இதுவேயாகும்!

பொருளாதாரத் தடை நடவடிக்கையாலும் போரினாலும் இலங்கை அரசின் இனப்படுகொலையினாலும் இன்னலுக்கு ஆளாகியிருக்கும் யாழ்ப்பாணம் தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உப்பு, அரிசி, காய்கறி உள்பட உணவுப் பொருட்களையும் மருந்துகளையும் கூட குண்டு வீசித் தகர்த்துவிட்ட கொடுமையில் மருந்துப் பொருட்களையும் இந்தியா அனுப்ப முன் வந்தது இந்த மனிதாபிமான முயற்சியை அதுவும் செஞ்சிலுவை சங்கத்தின் மூலமாக மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கையைக் கூட ஆணவம் பிடித்த அதிபர் ஜெயவர்த்தன அரசு அனுமதிக்க மறுத்து விட்டதால் வே இந்தியா அடுத்தபடியாக என்ன செய்யப் போகிறது. என்ற கேள்வி எழுந்துள்ளது.

திரும்பியது சரியே

உதவிப் பொருட்களுடன் சென்ற இந்தியப்படகுகள் நடுக்கடலில் மறிக்கப் பட்டு நடந்த விவாதத்திற்கு பிறகு நள்ளிரவுவாக்கில் மீண்டும் ராமேசுவரத்திற்கே திரும்ப நேரிட்டது. இந்தியர்களுக்கு குறிப்பாக தமிழக மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையும் மனத் துயரையும் அளித்திருக்கிறது என்பது உண்மையாகும்.

ஆனாலும் இந்திய படகுகள் இவ்வாறு திரும்பியது தான் சர்வதேச சட்ட ரீதியாகவும், இந்தியா இந்தப்பிரச்சினையில் ஆரம்பம் முதல் எடுத்த நிலையின் அடிப் படையிலும் முறையான உதவிப் பொருட்களுடன் செஞ்சிலுவை சங்க கொடிகளுடன் சென்ற படகுகள் மற்றொரு நாட்டின் கடல்பகுதியில் அந்த நாட்டின் அனுமதி இன்றி நுழையக் கூடாது என்பது சர்வதேச சட்டமாகும்.

மேலும் உதவிப்பொருட்களை அனுப்பும் முடிவை அறிவித்த போதே இந்தியா இலங்கையின் அனுமதி பெற்றே இந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெளிவுபடுத்தி விட்டது. எனவே இரக்கமற்ற முறையில் உதவிக்குக்கூட இலங்கை அரசு அனுமதி மறுத்து விட்ட நிலையில் இந்திய படகுகள் திரும்பியது சிங்களக் கடற்படையின் மிரட்டலுக்கு அஞ்சியோ அல்லது தாக்குதலுக்கு பயந்தோ அல்ல.

போர் என்று முடிவாகி பலகோடி வீரர்கள் அணி வகுத்து நின்ற நிலையிலும் போர்க்களத்திலும் தூது விட்ட ராமனும், தருமரும் கூட அந்த கதையைக் கூறும் ராமாயணமும் பாரதமும் இந்தியாவின் கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் அறநெறி வழுவாத பண்பையும் காட்டு பவைகளாகும்.

இந்தியா வாலைச்சுருட்டி கொண்டு ஓடிவிட்டதாக அற்பபுத்தி படைத்த சிங்கள வெறியர்கள் கொழும்பில் போஸ்டர் போட்டு மகிழலாம். ஆனால் அறநெறி நின்று இந்திய அரசு எடுத்த முடிவுக்கு இதனால் இழுக்கு ஏற் பட்டுவிடாது.

போர்க்களத்திலும் தூது அனுப்பிய ராமனும் தருமரும் எதிரிகளை இறுதியில் விட்டு வைக்கவில்லை என்பது தெரிந்ததே. இந்தியா மேற்கொண்ட இறுதி சமரச ஏற்பாட்டையும் அமைதி நடவடிக்கையையும் நிராகரித்துவிட்ட இலங்கையின் நடவடிக்கைக்கு இந்தியா கண்டனமும் கவலையும் தெரிவித் துள்ளது.

அடுத்த நடவடிக்கை [illegible]

[illegible] கட்டாயத்திற்கு [illegible] விட்டதை [illegible] அறிக்கை சுட்டிக் காட்டி விட்டது.

எனவே இந்தியா அடுத்த நடவடிக்கை எடுக்கப் போகிறது என்பது உறுதியாகி விட்டது.

யாழ்ப்பாணம் தமிழர்கள் [illegible] படுவதை இந்தியா பார்த்துக் கொண்டு [illegible] பிரதமர் [illegible]

### விமானங்கள் பறந்தன

விமானங்கள் மூலம் உணவு மற்றும் மருந்துப் பொருட்களை யாழ்ப்பாணத் தமிழர்களுக்கு அனுப்புவது என்றும் வானிலிருந்து இந்தப் பொருட்களை தமிழர்கள் வாழும் பகுதியில் போடுவது என்றும் இந்த ஆலோசனையில் முடிவு செய்யப்பட்டது.

## EPRLF appeal to JR government

# 'Respond to India's peace efforts'

NEWS TODAY, 23-5-87

Madras, May 23: The Eelam People's Revolutionary Liberation [illegible]

ourselves. We are pledged to a world free from fear, free from hatred, free from want", he said.

## Prayer campaign planned

INDIAN EXPRESS 24-5-87

Express News Service

COLOMBO, May 23

The Ceylon Workers Congress is to conduct a three-day "prayer cam-[illegible]

Front (EPRLF) has urged India to exert pressure on the Sri Lankan government to resume negotiations with "authentic" Eelam groups for a political solution to the island's ethnic conflict.

In a statement here Friday, EPRLF, secretary-General K. Pathmanabha said that the island government should cease forthwith its military offensive and respond positively to India's efforts for a negotiated settlement.

He urged the Government of India to exert maximum pressure on the Sri Lankan Government to resume negotiations with all "authentic" Eelam groups.

Pathmanabha said the Sri Lankan government should include representatives of the Communist Party of Sri Lankan (CPSL), the Sri Lanka Mahajana Pakshaya (SLMP), the Lanka Sama Samaja Pakshaya (LSSP), and the Nava Sama Samaja Pakshaya (NSSP), in its negotiating team to ensure that the process of negotiated settlement would aim at a fusion of the "broad, democratic, Sinhala and Tamil consensus".

These parties were committed to the process of a negotiated settlement, he said and calle upon the "misguided" elements in the Sri Lankan Tamil militants groups to cease their attacks on Sinhalese civilians which served to strengthen the hands of Sinhala chauvinistic forces.

He said the organisations which participated in the Thimpu talks in 1985 should be involved in the peace process.

In the reiterated that the EPRLF was a peace-loving movement, whose struggle corresponds to the description given to the non-aligned Movement by the late Indira Gandhi. "We are the custodians of freedom and human dignity. We offer co-existence, not co-destruction. We offer consensus, not confrontation. We reject all domination and seek none

Tamil Nadu Kamaraj Congress (TNKC) president P. Nedumaran said an agitation would soon be launched if Prime Minister Rajiv Gandhi did not take steps to stop the mass killings of Tamils in Sri Lanka.

In a statement in Madurai he said Rajiv gandhi should warn the Sri Lanka government of direct Indian intervention if the island government did not pull out its troops from Tamil areas.

He said it was surprising that Rajiv Gandhi hed not reacted strongly enough even after Sri Lankan Prime Minister Premadasa had ridiculed his peace efforts.

**Premadasa statement resented**

World Tamil Youth Federation president T.R. Janaradhanam said the reported statement of Sri Lankan Prime Minister R. Premadasa that "India was the root cause for the current situation in Sri Lanka" was totally "baseless and unwarranted".

Expressing deep anguish over the loss of civilian lives in the Jaffna peninsula after the latest Sri Lankan military offensive, he told newsmen in Udhagamandalam that the Indian government had always expressed its desire to live in peace and amity with its neighbours.

He said the Sri Lankan government was pursuing the military offensive unmindful of India's efforts to find an amicable settlement to the ethnic issue.

"Any action taken by the Indian government to stop the genocide of Tamils would be welcomed by the world's governments, since the Sri Lankan National Security Minister Lalith Athulathmudali has openly accepted that only a military solution has to be pursued", he added.

He appealed to the United Nations to send peace forces to Jaffna. He said an urgent meeting of the security council of the United Nations should be convened to discuss the developments in Sri Lanka

ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறை தீர்க்கப்பட்டு விட்டது.

அடுத்த நடவடிக்கை என்பது விமானம் மூலம் யாழ்ப்பாணம் மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்களை வழங்குவதாக இருக்கலாம்.

அப்படி ஒரு முடிவு எடுக்கப்பட்டால் அதை இலங்கை தடுப்பது என்றால் விமானத்தை சுட்டு வீழ்த்துவதே வழியாகும்.

அப்படிச் சுட்டு வீழ்த்தினால் அது நிச்சயம் போரில்தான் முடியும். எனவே இந்தியா அதற்குப் பதில் நடவடிக்கை எடுக்க நேரிடும்.

## ராஜீவ் அவசர ஆலோசனை

இலங்கை நிலவரம் குறிப்பாக இந்திய உதவிப் படகுகள் திருப்பி அனுப்பப்பட்டது மற்றும் யாழ்ப்பாணத்தில் சிங்களப்படை தாக்குதல் தீவிரமாகி இருப்பது குறித்து மூத்த அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் உள்பட முக்கியமானவர்களுடன் பிரதமர் ராஜீவ் காந்தி தீவிர ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆலோசனையில் ராணுவ தளபதிகளும் கலந்து கொண்டனர்.

[illegible] ரக போக்குவரத்து விமானங்கள் ஐந்தும், மிராஜ்—2000 ரக விமானங்கள் நான்கும் யாழ்ப்பாணத்திற்கு பறந்து சென்றன.

இந்த விமானங்கள் மூலம் உணவும் மருந்து பொருட்களும் கீழே போடப்படும். உதவிப்படகுகளில் சென்ற பத்திரிகையாளர்களில் பலரும் இந்த விமானத்தில் செல்கின்றனர்.

மாலை ஆறரை மணிக்கு இந்த விமானங்கள் பெங்களூருக்குத் திரும்பும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியப் படகுகளைத் திருப்பி அனுப்பி விட்ட தமிழ்க் கொக்கரித்த இலங்கை இதற்கு என்ன பதில் சொல்லும் என்று தெரியவில்லை.

பாதிக்கப்பட்ட தமிழர்களுக்குப் போடப்படும் உணவு மருந்துகளை ராணுவம் கைப் பற்றலாம். அல்லது இந்திய விமானத்தை சுட்டு வீழ்த்த முயலலாம்.

அப்படி நடந்தால்போர் மூளுவது உறுதி.

விமானங்கள் மூலம் அரிசி, கோதுமை, பருப்பு, சர்க்கரை, தேயிலை மற்றும் மருந்துகள் ஆகியவை அனுப்பப்பட்டன. இவற்றின் மொத்த எடை 25 டன்களாகும்.

paign" from June 1 on the lines of the one organised in January last year, to win citizenship rights for 98,000 stateless plantation workers of Indian origin.

This second "prayer campaign" is to remind the Government to implement the undertaking it gave in January 1986. The Government had at that time fixed a time-limit of 18 months to complete the process of grant of citizenship to the stateless persons. The deadline ends in August this year.

Rural Industrial Development Minister and CWC president R.Thondaman said on Saturday the decision to have this prayer campaign was unanimously taken by the CWC and nobody could change it. He explained that the campaign would be peaceful just like the previous campaign. (During the last campaign work on most tea estates came to a standstill.)

Mr. Thondaman is expected to meet President Jayewardene next week to discuss the situation in the plantation areas following the recent incident in Talawakelle in which a cooperative employee was shot and wounded by police. The man, alleged to be a member of a Tamil militant group, EPRLF had attempted to hurl grenades at the police. Mr. Thondaman has asked for an independent inquiry.

மத்தியகம் – தலவாக்கொல்லையில் கூட்டுறவு உத்தியோகத்தர் ஒருவர் பொலிஸாரினால் சுட்டு காயப்படுத்தப்பட்டார். இவர் பொலிஸார் மீது கிரனைட் தாக்குதலை மேற்கொள்ள முற்பட்டபோதே சுடப்பட்டார் எனவும் இவர் EPRLF இயக்கத்தை சேர்ந்தவரெனவும் நம்பப்படுகிறது. இச்சம்பவம் பற்றி நீதி விசாரணை நடத்தும்படி தொண்டமான் கேட்டுள்ளார். அடுத்தவாரம் ஜனாதிபதியை சந்தித்து பேச உள்ளார்.

# TULF wants India to bring about ceasefire

INDIAN EXPRESS 23-4-87

By Our Staff Reporter

India must ask both the Sri Lankan Government and the Tamil militants to observe a ceasefire, and itself guarantee it, to bring immediate peace to the island, Tamil United Liberation Front (TULF) secretary general A. Amirthalingam said in Madras on Wednesday.

He said he had received information that retaliatory attacks by troops in Jaffna, Navarkuli and Kankesanturai had killed 150 people on Wednesday.

The Lankan Cabinet had on Wednesday decided to pursue the military option to end the ethnic problem, he said.

**Bomb blast condemned:** Meanwhile, the Eelam Revolutionary Organisation (EROS) and the Liberation Tigers of Tamil Eelam (LTTE) have vehemently denied their involvement in Tuesday's bomb blast in Colombo.

An EROS spokesman said in Madras, "We strongly and unequivocally condemn this act of violence and bomb blast which has killed hundreds of innocent persons.

EROS said the attack could only have been the work of "foreign reactionary forces along with Sri Lankan collaborators."

Denying a *UNI* report from Colombo, the spokesman said some unidentified person had used the group's name to claim responsibility for the bombing.

An LTTE spokesman, condemning the bomb blast, said the LTTE did not believe in attacking civilians.

In a statement, Eelam People's Revolutionary Liberation Front (EPRLF) secretary general K. Pathmanabha said in Madras on Wednesday, that the "terrorist" bombing in Colombo would only strengthen the hands of President Jayewardene. EPRLF offered its condolences to the families of those killed in the incident.

People's Liberation Organisation of Tamil Eelam (PLOT) general secretary K. Umamaheswaran, in a statement said, "The bomb attack in Colombo was originally claimed by EROS and we condemn the action."

Such activities in the name of liberation would only force the Sinhala masses into supporting the Jayewardene regime and make all Tamils appear enemies of the Sinhala people.

www.tamilarangam.net
தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குழந்தையின் அழுகை ராணுவத்துக்கு கேளாதிருக்க வாயை மூடிவைத்த தாய்

## பதுங்கு குழியிலிருந்தவர்களின் உயிரைக் காப்பாற்ற அந்தக் குழந்தை உயிர்நீத்தது!

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் எமது ஊருக்குள் வீடுவீடாகத் தேடுதல் நடாத்திக் கொண்டு வந்தபோது அங்கிருந்த மக்கள் முழுப்பேரும் வானொலி அறிவித்த கோவில்களுக்குச் சென்றுவிட்டனர். நானும் எனது குடும்பத்தவர்களையும், உறவினர்களையும் கோவிலுக்குச் செல்வதற்காக உதவிகளைச் செய்து கொண்டிருந்த வேளை திடீரென எனது வீட்டுக்கு முன்பாகவுள்ள வீட்டுக்கு சில இராணுவத்தினர் வந்துவிட்டனர். என்ன செய்வதெனப் புரியாமல் எமது வீட்டில் இருந்த பதுங்கு குழியுள் புகுந்து ஒழிந்துக் கொண்டேன். பதுங்கு குழிக்கு மேல் தென்னைமரக் குற்றிகள் போடப்பட்டிருந்தபோதிலும் மணல்மூடைகள் அடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலே நின்று பார்த்தால் குழியுள் இருப்பவரைப் பார்க்கமுடியும்.

இந்த நிலையில் இராணுவம் எமது வீட்டைச் சுற்றிப் பார்த்துவிட்டு நான் பதுங்கி இருந்த குழிப்பக்கமாக வந்தது. வந்ததும் குழியுள் இறங்கும் பாதை வழியே துப்பாக்கியை நீட்டிப் பல தடவைகள் சுட்டது.

### மூக்கில் எறும்பு கடித்தபோதிலும்...

நான் எனது குலதெய்வமாகிய மாதாவை மனதில் நினைத்துக் கொண்டு கைகளைக் கூப்பியவாறு இறந்தவன் போல படுத்திருந்தேன். எனது மூக்கில எறும்பு ஒன்று இச்சமயம் கடித்துக் கொண்டிருந்தது. என்னும் அது எனக்குப் பெரிதாகத் தெரியவில்லை. படபடவெனச் சுட்ட இராணுவம் திரும்பிச் சென்றது. "ட" வடிவான பதுங்கு குழியாதலால் துப்பாக்கிச் சூடு எதுவும் எனக்குப் படவேயில்லை திரும்ப உயிர் பெற்றவனாக அரை மணித்தியாலத்தின் பின் மறுபிறவி எடுத்துக் குழியிலிருந்து வெளியே வந்தேன்.

வடமராட்சிப் பகுதியில் இராணுவம் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை அல்வாய் தெற்கைச் சேர்ந்த திரு. குட்டி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவரின் சகோதரி, மைத்துனர் உட்பட பலர் இன்று உயிருடன் இல்லை. இவரின் தாயார் ஒரு காலை இழந்துவிட்டார். அவர் உயிருடன் போராடுகிறார்.

### குடும்பத்தில் உயிர் தப்பிய ஒரே ஜீவன்

எனது குடும்பத்தில் இன்று எதுவித உடலூனமுமின்றி உயிர் தப்பி உள்ளவன் நான் ஒருவனே எனக் கூறியபோது குட்டியின் கண்களில் நீர் பனித்தது.

குட்டி கூறிய மற்றொரு உயிரை உறைய வைக்கும் சம்பவம்;

பதுங்கு குழியொன்றில் இளைஞர், யுவதிகள், சிறுவர், குழந்தைகள் என சுமார் இருபதுக்கு மேற்பட்டவர்கள் இருந்தார்கள்.

### அழுகுரல் கேட்காமல் குழந்தையின் வாயை...

ஒரு இளம் தாய் தனது பால்குடி பத்துமாதக் குழந்தையுடனும் குழியுள் இருந்தார். இராணுவம் வீடு வீடாக வருகிறது. இவர்கள் இருந்த குழிக்கும் வரப்போகிறது. இச்சமயம் பாலுக்காகவும், குழியுள் இருந்த சூழ்நிலை சரிவராததாலும் பச்சிளங் குழந்தை அழுகிறது. குழந்தையின் அழுகை வெளியே கேட்டுவிட்டால் இராணுவம் குழியுள் இருக்கும் தம்மைக் கண்டு சுட்டுவிடும் என்பதால் அந்த இளம் தாய் அழும் குழந்தையின் வாயைத் தனது கையினால் பொத்திப் பிடிக்கிறார். எவ்வளவு நேரத்துக்குப் பிடித்தார் என்பது அவருக்கும் மற்றவர்களுக்கும் தெரியாது. அவ்வளவு மரணபயம். இராணுவம் என்னவோ ஒருமாதிரி அந்தப் பதுங்குகுழிப் பக்கம் வராமலே சென்றுவிடுகிறது.

ஆனால் ...

அந்தப்பத்துமாதக்குழந்தை 'ருக்மன்'? ஆம் அவன் இறந்து விட்டான். குழியுள் இருந்த இருபது உயிர்களைக் காப்பாற்றி பெருமையுடன் அவன் தனது உயிரை அர்ப்பணித்து விட்டான்.

முத்துமாரி அம்மன் கோவிலில் சுமார் இரண்டாயிரம் மக்கள் இருக்கிறார்கள். பகல் இரண்டு ஷெல்கள் வந்து விழுந்து வெடித்தன. மக்கள் தெய்வச்செயலோ என்னவோ எதுவித ஆபத்துமின்றித் தப்பினார்கள். இரவு நடுச்சாம வேளை நான்கு ஷெல்கள் வந்து விழுந்தன.

இருபத்தியொருபேர் ஸ்தலத்திலே பலி. மூவர் பின்பு மரணம். சமரசம் உலாவும் இடம் சுடுகாடு என்பது அவ்வாலயத்தில் நிறைவேற்றப்பட்டது.

திரு. குட்டி சொல்கிறார், தனக்குத் தெரிந்த, அறிந்த அளவில் சுமார் ஐம்பது பேர் தனது சுற்றாடலில பலியாகி இருப்பார்கள் என்று.

### மகனைத் தொடர்ந்து தந்தையும் வெட்டப்பட்டார்

மகனை இராணுவம் வீட்டிலிருந்து கைதுசெய்து அழைத்துச் சென்றது. தந்தை எவ்வளவோ கெஞ்சிக்கேட்டார். பலனில்லை. இராணுவத்தைப் பின் தொடர்ந்தார் விடாக் கண்டனாகப் பின் தொடர்ந்தார். 'வடலிகள்' நின்று கொண்டிருக்கும் தோப்புக்குள் இராணுவத்துடன் வாதிட்டார். முடிவு?

தந்தைமுன் மகன் வாளால் வெட்டப்பட்டார். பின் தந்தையும் வெட்டப்பட்டார்.

அல்வாய் வடக்கில் கார் வைத்திருந்த அருளின் மகனும், டாக்டர் மகாலிங்கத்தின் மகனும் உட்பட மூவர் இராணுவத்தால் சுடப்பட்டு மரணமடைந்தனர்.

தனது தாயார் மரணம் அடைந்தாலும் தனது குடும்பத்தில் தானொருவன் ஆவது எஞ்சி உயிர்வாழ வேண்டும் என்பதற்காக குட்டி தனது ஊர்விட்டு பிற ஊரில் தங்கி இருக்கிறார்.

இப்பகுதியில் அரசாங்க உத்தியோகத்தர்களையும் இராணுவம் கைது செய்துள்ளது.

ஈழமுரசு.
5. 6. 87.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



A tander victim of the Sri Lankan Government's anti-Tamil military offensive. This happened on May 27 at Vannarpunnai Vaitheeswara temple in the Vadamarachi area of the Jaffna peninsula. This temple, one of the 18 places notified by the Sri Lanka Government as civilian shelters, was devastated by aerial bombing. The photographs have been made available by the EPIC.
More pictures on Page 4

# Division over my body: Jayewardene

COLOMBO, June 1.

The Sri Lankan President, Mr. J. R. Jayewardene, has said that the sovereignty, integrity and independence of the country "can be destroyed only over the dead bodies of myself, members of the Cabinet, the Government Parliamentary group and the United National Party".

While addressing a meeting at Bollagala on Sunday, Mr. Jayewardene said "we will never allow the unity and freedom of our country to be destroyed. If by any chance such an attempt were to take place, the first to sacrifice their lives will be myself, Cabinet Ministers and all the UNP parliamentarians".


Assuring the crowd that the unitary and democratic frame-work of Sri Lanka would always be protected and safeguarded, Mr. Jayewardene said he had reached the top of what he termed the "grease pole" despite many obstacles including attempts to shoot him, and "I intend to stay there until the correct time comes".—PTI

## Fast by Sri Lankan refugees

MANDAPAM, June 1.

Eleven Sri Lankan Tamil refugees, including two women, have begun a fast at the Mandapam refugee camp. This is in protest against the military offensive in Jaffna and the "failure" of the Government of India to save the Tamils in Sri Lanka.—Our Staff Reporter

THE HINDU. 2-6-87.



வடமராட்சி, வண்ணாரம்பண்ணை வயித்தீஸ்வரன் கோவில் இராணுவ தாக்குதலின் போது பலத்த சேதமடைந்தது. இக் கோவில் அரசு மக்களை ஒதுங்கும் படி அறிவித்திருந்த 18 இடங்களில் ஒன்றாகும். தாயின் மடியில் ஓடி விளையாடும் பாலகன் முதல் வயோதிபர் வரை பல நூறு பேர் கோரமாக கொலை செய்யப்பட்டதுடன் பல பெண்கள் இராணுவத்தினரால் மானபங்கப்படுத்தப்பட்டனர்.

www.tamilarangam.net

# வீரமணி - நெடுமாறனுக்கு ஈ.பி. ஆர். எல். எப். கண்டனம்

## 'கண்மூடித்தனமான முடிவு ஈழ போராட்டத்திற்கு உதவாது'

சென்னை, மே 23— வீரமணி, நெடுமாறன் ஆகியோரின் அறிக்கை உண்மைகளை மறுக்கிறது என்றும் கண்மூடித்தனமான முடிவு ஈழ மக்களின் போராட்டத்திற்கு உதவாது என்றும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து அந்த அமைப்பின் பொதுச்செயலாளர் பத்மநாபா வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இன்றையகால கட்டத்தில் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஒற்றுமை என்பதே மிகுந்த அவசியமான ஒன்ருக உள்ளது.

இவ்வொற்றுமையை உருவாக்குவதற்கு உழைப்பதே ஈழ விடுதலைப் போராட்டத்தில் அக்கறை கொண்ட அனைவரது கடமை. ஆனல் இந்த ஒற்றுமைக்கு முதல் எதிரியாக இருப்பது விடுதலை புலிகள் இயக்கமே.

ஏனைய விடுதலை இயக்கங்களை ஒவ்வொன்ருகராணுவ ரீதியில் அழித்தது அப்பட்டமான துரோகமாகும்.

ஆனல் இந்தஅறிக்கையோ ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் இருக்க வேண்டியதை விடுத்து விடுதலைப் போராட்டத்தை குலைக்கக் கூடியதாக இருக்கிறது.

தம்மை தவிர்த்த அல்லது தம்மை ஏற்றுக் கொள்ளாத எல்லா இயக்கங்களையும் அழிக்க முற்படுவதும் தொழிற்சங்கங்களைத் தடை செய்வதும், மக்களின் பேச்சுரிமை. எழுத்துரிமை போன்ற ஜனநாயக உரிமைகளை பறித்து ஆயுத முனையில் தடை செய்வது சமூக விரோதச் செயல் அல்லவா?

மக்களின் ஆதரவு ஏனைய இயக்கங்களுக்கு இல்லை என்று கூறுவது கண்ணை மூடிக் கொண்டு கூறப்பட்ட கூற்றேயாகும். துப்பாக்கி முனையில் மக்கள் அபிப்பிராயம் கூறுவது தடுக்கப்பட்டிருக்கையில் மக்களுக்கு உண்மையான அபிப்பிராயங்களை கண்டறிய வாய்ப்பு எப்படி ஏற்படும்?

ஏனைய இயக்கங்கள் பகிரங்கமாக இயங்குவது விடுதலைப் புலிகளால் ஆயுத முனையில் தடுக்கப்பட்டிருக்கிறதே தவிர மக்களால் தடுக்கப்படவில்லை.

எனவே வீரமணி, நெடுமாறன் ஆகிய இந்த தலைவர்கள் தமது முடிவில் ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு பாதகமான தன்மை இருப்பதை புரிந்துகொண்டு, ஒரு இயக்கத்திற்கு வக்காலத்து வாங்குபவராக இல்லாமல் முழு விடுதலைப் போராட்டத்திற்கும் உதவுபவர்களாக தம்மை மாற்றிக்கொண்டு ஈழ மக்களின் மதிப்பிற்குரியவர்களாக தொடர்ந்தும் தமது பாரபட்சமற்ற உழைப்பை ஏற்க வேண்டும் என்று வேண்டுகிறேம்''

- இவ்வாறு பொதுச்செயலாளர் பத்மநாபா கூறியுள்ளார்.

தினசரி 23-5-87

# போராளிகள் தலைவர் பத்மநாபா அறிக்கை!

தினகரன் (24-5-87)

சென்னை, மே. 24— ஈழ மக்கள்புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்) தலைவர் பத்மநாபா விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பது வருமாறு:—

வீரமணி, நெடுமாறன் ஆகியோரின் உண்மைகளை மறுப்பதும், கண்மூடித்தனமான முடிவும் ஈழ மக்களின் போராட்டத்திற்கு உதவாது.

கடந்த 19—ம் தேதி திராவிடக் கழக பொதுச் செயலாளர் வீரமணி தமிழ்நாடு காமராஜ் காங்கிரஸ் தலைவர் நெடுமாறன் ஆகியோர் விடுத்துள்ளஅறிக்கை எமக்கு மிகுந்த வியப்பை ஏற்படுத்தியுள்ளது.

### முதல் எதிரி

இன்றைய கால. கட்டத்தில் ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஒற்றுமை என்பதே மிகுந்த அவசியமான ஒன்ருக உள்ளது. இவ்வொற்றுமையை உருவாக்குவதற்கு உழைப்பதை ஈழ விடுதலைப் போராட்டத்தில் அக்கறை கொண்ட அனைவரதுகடமை ஆனல், இன்று இவ்வொற்றுமைக்கு முதல் எதிரியாக இருப்பது தமிழ் ஈழ விடுதலை புலிகள் இயக்கமே என்பது மறுக்க முடியாத உண்மை.

ஏனைய விடுதலை இயக்கங்களை ஒவ்வொன்ருக ராணுவ ரீதியில் அழித்தமை எல்லோரது கண் முன்னலேயே நடந்த அப்பட்டமான துரோகம். ஆனல் இவ்அறிக்கையோ ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் இருக்க வேண்டியதை விடுத்து விடுதலைப் போராட்டத்தை குலைக்கக் கூடியதாக எல்.டி.டி.ஈயின் அதிகார வெறிக்கு தூபம் போட்டு மற்றைய இயக்கங்களை நிராகரிக்கும்படியும் எல்.டி.டி.ஈ.யை மட்டுமே அங்கீகரிக்கும்படியும் மத்திய அரசைக் கோருவது ஆச்சரியத்தை தருகிறது.

### வேண்டுகோள்

அனைவருக்கும் பொதுவாக ஒட்டு மொத்தமாக ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவளித்து வளர்க்கவேண்டிய தலைவர்கள் கட்சி அரசியல் நடத்துவது போல் பக்கம் பார்த்து நின்று வக்காலத்து வாங்கும்நிலைக்கு தம்மைத் தாழ்த்திக் கொள்ளக் கூடாது. இது. ஈழ மக்களுடைய ஜீவ மரண போராட்டம். இதை ஒரு சிலரது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய பயன்பட உதவக் கூடாது. இதுவே எமது வேண்டுகோள்.

மேலும் இவ்வாருனதமது முடிவுக்கு இவர்கள் காட்டி உள்ள காரணம், எந்த ஆதாரமும் அற்ற வெறும் வக்காலத்தாகவே உள்ளது. சமூக விரோதச் செயல்களில் ஈடுபடாத இயக்கம் எல்.டி.டி.ஈ. என்கிருர்கள். ஆனல் பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் கொலை, பாசையூர் கொலை போன்றவை மட்டுமல்ல, எல்.டி.டி.ஈயை விமரிசித்தால்பச்சை மட்டை அடி 500 ரூபாய்தண்டம் போன்ற தண்டனைகள் எல்லாம் சமூக விரோதம் அல்லாதவையா?

### பாரபட்சம் காட்டாதீர்

எனவே, இத் தலைவர்கள் தமது முடிவில் ஈழ விடுதலை போராட்டத்திற்கு பாதகமான தன்மையை புரிந்து கொண்டு ஒரு இயக்கத்திற்கு வக்காலத்து வாங்குபவராக இல்லாமல் முழு விடுதலை போராட்டத்திற்கும் உதவுபவர்களாக தம்மை மாற்றிக் கொண்டு ஈழ மக்களின் மதிப்பிற்குரியவர்களாக தொடர்ந்தும் தமது பாரபட்சமற்ற உழைப்பை நல்க வேண்டும் என்று நாம் வேண்டுகிருேம்.

இவ்வாறு அறிக்கையில் கூறி உள்ளார்.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகளின் வதைமுகாமில் படுகொலை செய்யப்பட்ட தோழர்கள்.

## 31-வது நாள் நினைவஞ்சலி



ஆ. மோகனேஸ்வரன் (மஜீத்)

தோற்றம்:- 27-11-1964

அகால மரணம்:- 30-03-1987

நீர் எம்மை விட்டுப் பிரிந்து 31 நாட்கள் சென்றாலும் உமது நினைவு எமது நெஞ்சத்தைவிட்டு நீங்காது என்றென்றும் ஒளிவீசும்.

உமது ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.


உம் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா,
சகோதரர்கள்,
அத்தான்மார்,
உற்றார், உறவினர்கள்.

17, மணல்தறை வீதி,
கந்தர்மடம்.

[சி-8834]

## DR. பெஞ்சமின்

மலையக மண்ணில்: 10-6-60
ஈழ மண்ணில: 13-4-87



Dr. பெஞ்சமின் (ரவி) (பல்கலைக்கழக மருத்துவ பீட இறுதி ஆண்டு) 13-4-1987ல் அகால மரணமானார். இவர் மலையகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற Dr. K. கனகசபாபதி, திருமதி க. தனலட்சுமியின் அன்புமகனும் V. மாயா, V சிரோன்மணியின் அன்புப்பெருமகனும், நித்தியானந்தராஜா, நவரட்ணராஜா, கனகசபை, கண்ணன், சோதீஸ்வரி ஆகியோரின் அன்புத் தம்பியும், திலீப்குமார், கோமளேஸ்வரின் அன்பு அண்ணாவும் ஆவார். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

சுரேந்திரகுமார்,
66., கடுகலைவீதி,
கண்டி.

தகவல்: குடும்பத்தினர்.

(சி- 8710)

## ப. நிரமலன் (ஈஸ்வரன்)



பெருமாள் கோவிலடியைச் சேர்ந்த ப. நிர்மலன் 30-3 87 அன்றுஅகாலமரணமானார். இவர் K.C. பத்மநாபன்; செல்வராணி தம்பதியரின் மூத்த புதல்வனும் புவனேஸ்வரன் (Bonev - பாலா), பிரபாகரன், தேவகி, ஜனார்த்தனன், சௌமியா, சோபனா, சத்யா கிருஷ்ண, அனுசூயா, யசோதரா, அமுதசாகரன், ஆகியோரின் அருமை சகோதரனும் ஆவார். இவ் அறிவத்தலை உற்றார் உறவின நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: K. C. பத்மநாதன்
6, கன்னாதிட்டி ரோட், யாழ்ப்பாணம்.

(சி 8391)

மக்களை நேசித்த உரமான தோழர்கள் சரியும்போது மக்கள் பாதுகாப்பை இழக்கிறார்கள். சுதந்திரத்திற்காய் போராடி சுதந்திரம் மறுக்கப்பட்ட மனிதர்கள் நீங்கள், உங்கள் மரணங்களால் நாம் சோர்வடையவில்லை. எமது புரட்சிப் பாதையை மேலும் உரப்படுத்தியுள்ளோம். உங்கள் கனவுகளை நிஜமாக்கியே தீருவோம். இது எங்கள் உறுதி, இது எங்கள் சபதம்.

"மரணம் வாழ்வின் முடிவல்ல."

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

சிங்கள மக்கள் படுகொலை: 19-4-87

தினபூமி

# விடுதலைப்புலிகள் மீது ஈ.பி.ஆர்.எல்.எப். புகார்

சென்னை, ஏப். 19— சிங்கள மக்களை கொன்று குவித்த விடுதலைப்புலிகள் மீது மற்றொரு போராளி கள் அமைப்பான ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.) புகார் கூறியுள்ளது.

இதுகுறித்து 'ஈ.பி.ஆர்.எல்.எப்.' அமைப்பைச் சேர்ந்த பத்மநாபா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

## கண்டனம்

கொழும்பு— திரிகோணமலை வீதியில் நூற்றுக்கும் மேற்பட்ட அப்பாவி சிங்களவர்களை கண்மூடித்தனமாக படுகொலை செய்த தமிழ்ஈழ விடுதலைப்புலிகளின் செயலை வன்மையாக கண்டிக்கிறோம். இச்செயல் மனித நாகரிக மற்ற, காட்டுமிராண்டித் தனமானதாகும்.

தமிழ்ஈழ விடுதலைப்புலிகள் ஈழப்போராட்டத்தில் உள்ள ஏனைய சகோதர அமைப்புகள் மீது நடத்திய மோதல்களினால் விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் ஈழப்போராட்டத்தில் ஏற்படுத்தியபலவீனங்களை மறைப்பதற்கு இவ்வாறான அநாகரிகமான செயல்களில்ஈடுபடுவதால் இலங்கை அரசின் இனப்படு கொலைகள் சர்வதேச ரீதியாக நியாயப்படுத்தப் படுவதாக உள்ளது.

### நன்மை இல்லை

இலங்கை அரசானது பல் லாயிரக்கணக்கான ஈழ மக்களை படுகொலை செய்வதற்கும், வழிவகுப்பதாகவும் அமையும். அதைவிடுத்து, இச்செயலானது எந்த வகையிலும் ஈழ மக்களுக்கோ, ஈழப் போராட்டத்திற்கோ நன்மையளிப்பதாக அமையாது. ஈழமக்களின் நலன் மீது உண்மையான விசுவாசம் கொண்ட எவரும் சாதாரண அப்பாவி சிங்கள மக்களை படுகொலை செய்வதை மகிழ்ச்சி கொள்ளவோ அல்லது அதனை நியாயப்படுத்தவோ முடியாது இவ்வாறான அரசியலற்ற அந்த பயங்கரவாத நடவடிக்கைகள் மூலம் ஈழ மக்களின் போராட்டத்தையே பலவீனப்படுத்தும் போக்குகளை நாம் வன்மையாக கண்டிக்கிறோம்.

இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

### ஈபிஆர்எல்எப் கண்டனம்

தினமணி 19-4-87

சென்னை, ஏப். 18— இலங்கை கிழக்கு மாகாணத்தில் பஸ் பயணிகளை எல்.டி.டி.ஈ. அமைப்பு படுகொலை செய்ததாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.) கண்டித்துள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் செயலதிபர் கே. பத்மநாபா வெளியிட்டுள்ள ஒரு செய்திக்குறிப்பில் இந்தச் செயல் 'நாகரீகமற்ற காட்டு மிராண்டித்தனம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கைப் படுகொலை: இந்தியா கண்டனம்

தினமணி (19-4-87)

புது டில்லி, ஏப். 18— இலங்கையில் கிழக்கு திருகோணமலை மாவட்டத்தில் நூற்றுக்கு மேற்பட்ட பஸ் பயணிகள் சுட்டுக் கொல்லப்பட்டதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமையன்று திருகோணமலை-ஹபரு சாலையில் சென்ற பஸ்களையும், லாரிகளையும் தடுத்து நிறுத்தி, பயணிகளை இறக்கி சுட்டுக் கொன்றார்கள் அல்லவா? இந்த சம்பவத்தில் முன்னர் 122 பேர் இறந்ததாகக் கூறப்பட்டது. சாவு எண்ணிக்கை 126 ஆக மேலும் உயர்ந்துவிட்டதாக கடைசியாகக் கிடைத்த தகவல் கூறுகிறது.

இந்த சம்பவம் குறித்து இந்திய வெளியுறவுத் துறையை சேர்ந்த அதிகாரி ஒருவர் கண்டன அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அறிக்கை விவரம் வருமாறு:

கடந்த வெள்ளிக்கிழமையன்று இலங்கையில் நடந்த கொடூரமான, பாதகமான படுகொலைகள் குறித்து இந்தியா ஆழ்ந்த துயரமும், அதிர்ச்சியும் அடைந்துள்ளது. இந்தப் படுகொலையில் எல்லா முக்கிய இனங்களைச் சேர்ந்த பொது மக்களும் குரூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தப் படுகொலைகளை இந்தியா வன்மையாக கண்டிக்கிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நடைபெறும் உண்மையான, தொடர்ச்சியான முயற்சிகளுக்கு இடையூறு செய்வதே இந்த வன்முறையின் நோக்கமாகும்.

இவ்வாறு இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# 75 தமிழர் படுகொலை

## சிங்கள ராணுவம் குண்டுவீச்சு!!

சென்னை, மே. 20— இலங்கையில் தமிழர்களை சிங்கள ராணுவம் கொன்று குவித்து வருகிறது அல்லவா?

யாழ்ப்பாணம் பகுதியில் சுழிபுரம், தொல்புரம், வசவிலான், யாழ் நகர் ஆகிய இடங்கள் மீது ஹெலிகாப்டரில் இருந்து சிங்கள ராணுவம் குண்டு வீசியது. இதில் 50—க்கும் மேற்பட்ட தமிழர்கள் பலியானார்கள். பனை மார்க்கெட்டில் குண்டு வீசி 2 பேரை கொன்றனர். தனியார் பஸ் மீது ஹெலிகாப்டரில் இருந்து வீசிய குண்டு விழுந்ததில் 2 பேர் செத்தனர். 3 பேர் காயம் அடைந்தனர்.

இந்த தகவலை சென்னையில் உள்ள ஈழ மக்கள் செய்தி தொடர்பு நிலையம் தெரிவித்து உள்ளது.

தினகரன் (20-5-87)

www.tamilarangam.net
தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

வேடிக்கை பார்க்க மாட்டோம்

# இலங்கைக்கு இந்தியா கடும் எச்சரிக்கை

புதுடில்லி, ஜூன் 3— இலங்கை யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்கள் படும் அவதியை வெறுமனே பார்த்துக் கொண்டு இருக்க மாட்டோம் என்று இலங்கைக்கு இந்தியா எச்சரிக்கை விடுத்திருப்பதாக இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி ஒருவர் புதன்கிழமை நள்ளிரவுக்குப் பின் தெரிவித்தார்.

ராமேசுவரத்திலிருந்து உணவு மற்றும் மருந்துப் பொருட்களை ஏற்றிச்சென்ற படகுகளை இலங்கை செல்ல அனுமதிக்க முடியாது என்று இலங்கை ராணுவம் பிடிவாதமாக மறுத்ததைத் தொடர்ந்து அவை ராமேசுவரத்திற்குத் திரும்பி வந்தன. அதன் பிறகு டெல்லியில் இந்திய வெளியுறவுத் துறை பிரதிநிதி இந்தியாவின் எச்சரிக்கை பற்றிய செய்தியை வெளியிட்டார்.

இலங்கை கடல் பகுதிக்குள் நுழைய முயன்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கை ராணுவம் மறைமுகமாக மிரட்டியது. இந்த நிலையில் இந்தியப் படகுகள் ராமேசுவரம் திரும்புவதைத் தவிர வேறு வழியில்லை என்று அந்த இந்திய அதிகாரி கூறினார்.

உணவு, மருந்துப் பொருள்களுடன் யாழ்ப்பாணத்துக்குப் புறப்பட்ட இந்தியப் படகுகளை, பீரங்கிப் பொருத்தப்பட்ட இலங்கை கடற்படை படகுகள் வழி மறித்து தடுத்தன. இந்த செயலை இந்தியா வன்மையாகக் கண்டித்துள்ளது என்று இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி குறிப்பிட்டார்.

"ஐந்து மாத காலம் யாழ்ப்பாண மக்களை பொருளாதார முற்றுகைக்குள் சிக்க வைத்துவிட்டு அப்பாவிகளான அவர்களை கடந்த சில வாரங்களாக இலங்கை ராணுவம் கொன்று குவித்து வருகிறது. இந்த கொடுஞ்செயல்களின் தொடர்ச்சியாக இந்தியா அனுப்பிய நிவாரணப் பொருள்களை இலங்கை அரசு தடுத்துள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள தமிழர்களுக்கு அடிப்படை மனித உரிமைகளைக்கூட மறுப்பதில் இலங்கை அரசு உறுதியாக உள்ளது என்பதை இந்த நடவடிக்கை தெளிவுபடுத்துகிறது" என்றும் இந்திய வெளியுறவுத் துறை அதிகாரி கூறினார்.

இத்துடன் உணவுப் பொருள்களையும், மருந்துப் பொருள்களையும் யாழ்ப்பாண மக்களுக்கு அனுப்ப மேற்கொண்ட 'கருணை முயற்சி'க்கு இந்தியா முற்றுப்புள்ளி வைத்துவிட்டது என்றும் அந்த அதிகாரி கூறினார்.

இலங்கையில் உள்ள தமிழர்கள் பெருந்துயர்களுக்கு ஆளாக்கப்படுவது குறித்து இந்திய மக்கள் ஆழ்ந்த வருத்தமும், உணர்ச்சிக் கொந்தளிப்பும் அடைந்துள்ளனர் என்பதையும் இந்திய அதிகாரி சுட்டிக் காட்டினார்.

## ராஜீவ் பேட்டி

பஞ்ஜி, ஜூன் 3— இலங்கை யாழ்ப்பாணத்தில் சொல்லொணா துயருறும் மக்களுக்கு உணவுப் பொருட்கள், மருந்துகள் மற்றும் பிற பொருட்களை இந்தியா அனுப்பி வைப்பதில் தவறு ஏதும் இல்லை. நியாயம்தான் என்று இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி கூறியுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நிலவும் சூழ்நிலையை பஞ்சாபுடன் ஒரு காலும் ஒப்பிட்டுப் பேச முடியாது என்று ராஜீவ் காந்தி சொன்னார்.

பஞ்சாபில் மக்களை ராணுவத்தினர் குண்டு வீசித் தாக்கவில்லை. யாழ்ப்பாண மக்களை, இலங்கை ராணுவத்தினர் விமானத்திலிருந்து கொண்டு யந்திரத் துப்பாக்கிகளால் குறி வைத்து சுட்டுத் தள்ளுகின்றனர். அம்மாதிரி சம்பவம் பஞ்சாபில் நடக்கவில்லை என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இலங்கைப் பிரச்சினைக்கு தீர்வு காண பெரும் முட்டுக்கட்டையாக இருப்பது இலங்கை அரசின் நடவடிக்கைதான். யாழ்ப்பாணம் மீது இலங்கை அரசு போர்ப் பிரகடனமே செய்து தாக்குதல் நடத்துகிறது என்று ராஜீவ் காந்தி நிருபர்களிடம் பேசும்போது கூறினார்.

இலங்கைப் பிரச்சினையை பொறுத்த மட்டில் இந்தியாவின் அணுகுமுறை ஸ்திரமானதாகவும், நேரானதாகவும் உள்ளது. இந்தியாவின் நிலை பற்றி நட்பு நாடுகள் அனைத்துக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்று ராஜீவ் காந்தி குறிப்பிட்டார்.

### ஐ.நா. செயலருக்கு இலங்கை மந்திரி தகவல்

கொழும்பு, ஜூன் 3— இலங்கையில் யாழ்ப்பாணம் பகுதியில் அவதிப்படும் மக்களுக்கு உதவுவதற்காக நிவாரணப்பொருட்களை அனுப்புவது என்ற இந்திய அரசின் முடிவினால் உருவாகியுள்ள நிலவரம் குறித்து ஐ.நா. பொதுச் செயலாளர் பெரஸ்டி கொய்யாருக்கு இலங்கை வெளி விவகார மந்திரி ஏ.சி.எஸ். ஹமீது தெரிவித்துள்ளார் என்று இலங்கை வெளிவிவகார அமைச்சகம் கூறியது.

இந்த நிலவரம் பற்றி ஐ.நா. பந்தோபஸ்து சபையின் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கு தெரிவிக்குமாறு ஹமீது ஐ.நா. பொதுச்செயலாளரை கேட்டுக்கொண்டதாகவும் அது தெரிவித்தது.

தினமணி
4-6-87

தினகரன் "நாங்கள் சிறிய நாடு" 5-6-8

# இலங்கையிடம் இந்தியா இரக்கம் காட்டவேண்டும்!

அதுலத்முதலி கெஞ்சல்!!

HINDU 19-4-87

## We can end it in a day: Jayewardene

COLOMBO, April 18.

The Sri Lankan President, Mr. J. R. Jayewardene, said today that his Government had the "ability to eliminate terrorism from Jaffna in one day, but is holding back because of the destruction such action will cause".

The President's warning came in the wake of yesterday's massacre at Aluthoya in Eastern Trincomalee district. He was addressing the 22nd congress of the Lanka Jatika Estate Workers' Union at the hill town of Nuwara Eliya, 180 km from here, according to the Sri Lanka Broadcasting Corporation.

Mr. Jayewardene said a handful of persons hiding among the peace-loving people of the North "are engaged in terrorism and forcing a threat to peace in the country". The Government had the ability to eliminate terrorism from Jaffna in one day, he added.

Referring to recent violence in plantation estates, he appealed to the workers to help the police in apprehending the culprits.

Stating that a large number of stateless persons in the estates had been given citizenship by his Government, the President said he would look into the possibility of providing them with voting rights

யாழ்ப்பாணத்தை பிடிக்க

# 20 ஆயிரம் துருப்புகள்; 15 விமானங்கள் குண்டுவீச்சு

தினகரன் 27-5-87

100 பேர் உடல் கருகி சாவு

www.tamilarangam.net
தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இந்தியாவின் அடுத்த நடவடிக்கை என்ன?

# போர்க்கப்பல் துணையுடன் படகுகளில் உணவு சப்ளை

மக்கள் குரல் 5-6-87

### டெல்லியில் முக்கிய ஆலோசனை

புதுடெல்லி, ஜூன். 5: யாழ்ப்பாணத்திற்கு நேற்று விமானங்கள் மூலம் உணவு வழங்கப்பட்டதுடன் பணி முடிந்து விடவில்லை. அங்கு அவதிப்படும் தமிழர்களின் துயர்துடைக்க தொடர்ந்து உதவி அளிப்பதற்கான வன்முறைகளை இந்தியா ஆராய்ந்து வருகிறது.

ராமேஸ்வரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கடல் வழியாக உதவி உணவுப் பொருட்களை அனுப்புவது ஒன்றாகும். ஒரு முறை முயன்று, கைவிட்ட இந்த முயற்சியை, மீண்டும் தொடருவது என்று இந்தியா முடிவுக்கு வந்து இருக்கிறது.

ராமேஸ்வரத்தில் படகு அணி வரிசையை திருத்தி அமைத்து, ஆயுத கப்பல் புடைசூழ யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களை அனுப்பி வைப்பது குறித்து தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

## 'விக்ரம்' ஒன்று போதும்

உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லும் இந்திய படகுகளுக்கு பாதுகாப்புக்காக பெரிய அளவிலான விமானம் தாங்கி கப்பல்கள் தேவை இல்லை. நமது கரையோர காவல் கப்பலான 'விக்ரம்' போதும். அத்துடன் மற்றொரு கரையோர கப்பலும் ஆயத்த நிலையில் சென்றால் இந்த பணியினை எளிதில் முடித்து விடலாம்.

யாழ்ப்பாணம் தமிழர்களுக்கு அவசியமான உதவிகள் போய்ச் சேர வேண்டும் என்பது மிகவும் அவசரம்; அவசியமானது என்பது உணரப்பட்டு விட்டது. நேற்றைய விமானம் மூலமான உணவு சப்ளை இதை புரிய வைத்து விட்டது. எனவே அடுத்த நடவடிக்கையாக மீண்டும் ராமேஸ்வரத்திலிருந்து படகுகள் மூலம், உணவு அனுப்புவது குறித்து டெல்லியில் ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

நேற்று விமானங்கள் மூலம் சப்ளை அனுப்பப்பட்டது. இது உலக நாடுகளிடையே ஏற்படுத்தியுள்ள எதிரொலி, ஆங்காங்கே உள்ள நமது தூதுவர்கள் மூலம் தலைநகருக்கு வந்து கொண்டிருக்கிறது. மனிதாபிமான அடிப்படையில் இந்தியாவின் இந்த உதவி நடவடிக்கையை அமெரிக்கா உள்ளிட்ட எந்த வல்லரசு நாடும் கண்டிக்கவில்லை. ராணுவ படையெடுப்பினாலும், பொருளாதார முற்றுகையினாலும் சீரழியும் யாழ்ப்பாணம் தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் இந்தியா உதவுவது நியாயமானதே என்று பெரும்பாலான நாடுகள் கருதுகின்றன. இந்தியாவின் உதவியை தடுக்கும் ஜெயவர்த்தனே அரசின் போக்கை எந்த நாடுமே ஆதரிக்க முன் வரவில்லை. இந்தியாவை எந்த நாடும் கண்டிக்கவில்லை. அதே போல ஜெயவர்த்தனேவுக்கு எந்த நாடும் இது விஷயத்தில் ஆதரவு தரவும் இல்லை. இந்த பின்னணியில் யாழ்ப்பாணத்திற்கு இந்தியாவின் அடுத்த கட்ட உதவி பற்றி இன்னும் இரண்டொரு நாட்களில் முடிவு எடுக்கப்பட்டு விடும்.

## கொழும்பு தமிழருக்கு ஆபத்து

யாழ்ப்பாணம் பகுதியில் 5 விமானங்கள் மூலம் உணவுப் பொருட்களையும், மருந்துப் பொருட்களையும் போடும் இந்திய விமானப்படையின் சாதனையைக் கண்டு இலங்கை ஆத்திரத்தில் கொதித்துப் போயிருக்கிறது. இதன் எதிரொலியாக கொழும்பு தமிழர்களுக்கு மேலும் ஆபத்து உருவாகி இருக்கிறது. உயிருக்கு பயந்து மக்கள் வீடுகளை காலி செய்தவண்ணமிருக்கிறார்கள்.

கொழும்பு நகரில் உள்ள 5 நட்சத்திர ஓட்டல்கள் இரண்டில் பெருமளவு தமிழர்கள் அடைக்கலம் புகுந்துள்ளனர். இலங்கை தீவில் கடந்த 1983, ஜூலை மாதம் நடந்த வன்முறை கலவரம், இனப்படுகொலைக்குப் பின்னால் எப்படி தமிழர்கள் குடும்பங்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறியதோ, அது மாதிரி ஒரு நிலைமை யாழ்ப்பாணத்தில் இப்போது மீண்டும் தலைதூக்கியுள்ளது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

## இந்தியாவின் அடுத்த நடவடிக்கை என்ன?

# போர்க்கப்பல் துணையுடன் படகுகளில் உணவு சப்ளை

மக்கள் குரல் 5-6-87

## டெல்லியில் முக்கிய ஆலோசனை

புதுடெல்லி, ஜூன். 5: யாழ்ப்பாணத்திற்கு நேற்று விமானங்கள் மூலம் உணவு வழங்கப்பட்டதுடன் பணி முடிந்து விடவில்லை. அங்கு அவதிப்படும் தமிழர்களின் துயர்துடைக்க தொடர்ந்து உதவி அளிப்பதற்கான வழிமுறைகளை இந்தியா ஆராய்ந்து வருகிறது.

ராமேஸ்வரத்திலிருந்து யாழ்ப்பாணத்திற்கு கடல் வழியாக உதவி உணவுப் பொருட்களை அனுப்புவது ஒன்றாகும். ஒருமுறை முயன்று, கைவிட்ட இந்த முயற்சியை, மீண்டும் தொடருவது என்று இந்தியா முடிவுக்கு வந்து இருக்கிறது.

ராமேஸ்வரத்தில் படகு அணி வரிசையை திருத்தி அமைத்து, ஆயுத கப்பல் புடைசூழ யாழ்ப்பாணத்திற்கு உணவுப் பொருட்களை அனுப்பி வைப்பது குறித்து தீவிரமாக பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

### 'விக்ரம்' ஒன்று போதும்

உணவுப் பொருட்களை எடுத்துச் செல்லும் இந்திய படகுகளுக்கு பாதுகாப்புக்காக பெரிய அளவிலான விமானம் தாங்கி கப்பல்கள் தேவை இல்லை. நமது கரையோர காவல் கப்பலான 'விக்ரம்' போதும். அத்துடன் மற்றொரு கரையோர கப்பலும் ஆயத்த நிலையில் சென்றால் இந்த பணியினை எளிதில் முடித்து விடலாம்.

யாழ்ப்பாணம் தமிழர்களுக்கு அவசியமான உதவிகள் போய்ச் சேர வேண்டும் என்பது மிகவும் அவசரம்; அவசியமானது என்பது உணரப்பட்டு விட்டது. நேற்றைய விமானம் மூலமான உணவு சப்ளை இதை புரிய வைத்து விட்டது. எனவே அடுத்த நடவடிக்கையாக மீண்டும் . ராமேஸ்வரத்திலிருந்து படகுகள் மூலம், உணவு அனுப்புவது குறித்து டெல்லியில் 'ஆலோசனை நடத்தப்பட்டு வருகிறது.

நேற்று, விமானங்கள் மூலம் சப்ளை அனுப்பப்பட்டது. இது உலக நாடுகளிடையே ஏற்படுத்தியுள்ள எதிரொலி, ஆங்காங்கே உள்ள நமது தூதுவர்கள் மூலம் தலைநகருக்கு வந்து கொண்டிருக்கிறது. மனிதாபிமான அடிப்படையில் இந்தியாவின் இந்த உதவி நடவடிக்கையை அமெரிக்கா உள்ளிட்ட எந்த வல்லரசு நாடும் கண்டிக்கவில்லை. ராணுவ படையெடுப்பினாலும், பொருளாதார முற்றுகையினாலும் சீரழியும் யாழ்ப்பாணம் தமிழர்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் இந்தியா உதவுவது நியாயமானதே என்று பெரும்பாலான நாடுகள் கருதுகின்றன. இந்தியாவின் உதவியை தடுக்கும் ஜெயவர்த்தனே அரசின் போக்கை எந்த நாடுமே ஆதரிக்க முன் வரவில்லை. இந்தியாவை எந்த நாடும் கண்டிக்கவில்லை. அதே போல ஜெயவர்த்தனேவுக்கு எந்த நாடும் இது விஷயத்தில் ஆதரவு தரவும் இல்லை. இந்த பின்னணியில் யாழ்ப்பாணத்திற்கு இந்தியாவின் அடுத்த கட்ட உதவி பற்றி இன்னும் இரண்டொரு நாட்களில் முடிவு எடுக்கப்பட்டு விடும்.

### கொழும்பு தமிழருக்கு ஆபத்து

யாழ்ப்பாணம் பகுதியில் 5 விமானங்கள் மூலம் உணவுப் பொருட்களையும், மருந்துப் பொருட்களையும் போடும் இந்திய விமானப்படையின் சாதனையைக் கண்டு இலங்கை ஆத்திரத்தில் கொதித்துப் போயிருக்கிறது. இதன் எதிரொலியாக கொழும்பு தமிழர்களுக்கு மேலும் ஆபத்து உருவாகி இருக்கிறது. உயிருக்கு பயந்து மக்கள் வீடுகளை காலி செய்தவண்ணமிருக்கிறார்கள்.

கொழும்பு நகரில் உள்ள 5 நட்சத்திர ஓட்டல்கள் இரண்டில் பெருமளவு தமிழர்கள் அடைக்கலம் புகுந்துள்ளனர். இலங்கை தீவில் கடந்த 1983, ஜூலை மாதம் நடந்த வன்முறை கலவரம், இனப்படுகொலைக்குப் பின்னால் எப்படி தமிழர்கள் குடும்பங்கள் கூட்டம் கூட்டமாக வெளியேறியதோ, அது மாதிரி ஒரு நிலைமை யாழ்ப்பாணத்தில் இப்போது மீண்டும் தலைதூக்கியுள்ளது.

www.tamilarangam.net
தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

### இலங்கை தமிழருக்கு முழு ஆதரவு தாருங்கள்

# தமிழக மக்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் ஈ.பி.ஆர்.எல்.எப். வேண்டுகோள்

மக்கள் குரல் 28-5-87.

சென்னை, மே. 28: இலங்கை தமிழர்களுக்கு தமிழக மக்களும், தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகளும் முழு ஆதரவு தர வேண்டும் என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எப்.) பொதுச் செயலாளர் கே. பத்மனபா கூறியுள்ளார்.

பத்மனபா நேற்று ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தை பூண்டோடு அழிப்போம் என்று இலங்கை அரசு வெளிப்படையாக அறிவித்துள்ளது. இப்போது போராளிகளுக்கும் ராணுவத்துக்கும் இடையே கடும் சண்டை நடந்து கொண்டிருக்கிறது. ராணுவத்தினரின் குண்டு வீச்சில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் பலியாகியுள்ளனர். ராணுவத்தினர் விமானங்களிலிருந்து மக்கள் வாழும் பகுதிகளில் குண்டுமாரி பொழிந்தவண்ணம் இருக்கிறார்கள் என்று பத்மனபா கூறியுள்ளார்.

இலங்கை தமிழர் பிரச்சினைகளுக்கு அரசியல் தீர்வுகாண வேண்டும் என்று முற்போக்கு ஜனநாயக சக்திகள் அனைத்தும் குரல் எழுப்புகின்றன. ஆனால் இதையெல்லாம் இலங்கை அரசு காதில் போட்டுக் கொண்டதாகவே தெரியவில்லை. அரசியல் தீர்வு என்று கூறிக் கொண்டு தமிழர்களை பூண்டோடு அழிக்கும் காரியத்தில் தான் இலங்கை அரசு முழுமூச்சுடன் ஈடுபட்டுள்ளது என்றும் பத்மனபா கூறியிருக்கிறார்.

வாழ்வா? சாவா? என்ற நிலையில் இலங்கை தமிழர்கள் இருக்கிறார்கள். இந்த நிலையில் இலங்கை தமிழர்களுக்கு தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகளும், தமிழக மக்களும் முழுஆதரவு தர வேண்டும். தமிழர்களை பாதுகாக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும். இதில் தாமதம் ஏற்பட்டால் தமிழர்கள் பூண்டோடு அழிந்து போகும் நிலைதான் ஏற்படும் என்று பத்மனபா அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

## EPRLF's appeal

28-5-87

MADRAS, May 27.

The Eelam People's Revolutionary Liberation Front (EPRLF) has appealed to the people of Tamil Nadu and political parties in the State to support the Tamils of Sri Lanka. Any delay would only help exterminate the Tamils, it said.

The EPRLF secretary-general, Mr. K. Pathmanabha, said, in a statement, today that the Sri Lankan Government had openly announced its onslaught on the Jaffna peninsula. Hundreds of Tamils had been killed and Jaffna town subjected to aerial bombing. The Sri Lankan Government's efforts to decimate the Tamils, even as it was claiming that it was for a political solution, revealed that it was not prepared to listen to "the voice of any progressive or democratic force."

The Tamils of Sri Lanka were facing a life and death struggle. The people of Tamil Nadu and political parties in the State should offer firm support to the Tamils of the island and also take expeditious steps to protect them, Mr. Pathmanabha said.

HINDU

### அமிர்தலிங்கம் வருத்தம்

# தமிழர் குழுக்கள் இணைய எல்.டி.டி.ஈ. தடையாயுள்ளது

தினமணி 8-4-87.

கொழும்பு, ஏப். 7— ஈழ விடுதலைக்காக அனைத்து போராளி அமைப்புகளையும், தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியையும் (டி.யு.எல்.எப்.) ஒரே குடையின் கீழ் கொண்டுவர தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் (எல்.டி.டி.ஈ.) தடையாக இருப்பதாக ஏ. அமிர்தலிங்கம் வருத்தமுடன் கூறியுள்ளதாக கொழும்பில் ஒரு பத்திரிகை தெரிவித்தது.

தமிழ் ஈழ. விடுதலைப் புலிகள் தனியாக செயல்பட விரும்புவதாகவும், அப்படி தனித்து இயங்குவதன் மூலம் ஒரு பலனையும் அடையப் போவதில்லை என்பதை விரைவிலேயே அவர்கள் உணருவார்கள் என்றும் அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.

தமிழ்ப் போராளிக் குழுக்களிடையே நடந்துவரும் மோதல் இலங்கை ராணுவத்துக்கு மிகவும் சாதகமாக இருக்கிறது என்று அமிர்தலிங்கம் கூறியிருப்பது 'வீரகேசரி' என்ற பத்திரிகையில் வெளி வந்துள்ளது.

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு எங்கள் கட்சி தன்னை மட்டும் ஏகப் பிரதிநிதியாகக் கருதவில்லை; தமிழ்ப் போராளி குழுக்களுக்கும் அதில் பெரும் பங்கு இருக்கிறது என்று அமிர்தலிங்கம் கூறியுள்ளார்.

#### வன்முறை நின்றால் தான் பேச்சுவார்த்தை

ஆயுதம் ஏந்தி போராடுவதை நிறுத்தாத எந்தவொரு தமிழ் போராளி குழுவுடனும் இலங்கை அரசு பேச்சுவார்த்தை நடத்தாது என்று இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தன, கொழும்பில் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றிற்கு திங்களன்று பதில் கூறியிருக்கிறார். தமிழர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணத் தயாராக இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

#### "3 நட்சத்திரங்கள்"

ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ. பி. ஆர். எல். எப்.), தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (டெலோ), தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் (பிளாட்) ஆகிய 3 தமிழ்ப் போராளிக் குழுக்களும் "3 நட்சத்திரங்கள்" என்ற பொதுப் பெயரில் ஒரே அமைப்பாக இணைந்து செயல்பட முடிவு செய்துள்ளன.

www.tamilarangam.net
தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையை நிர்ப்பந்திக்க வெளிநாடுகளிடம் இந்தியா முறையீடு

மக்கள்குரல் 3-6-87.

மக்கள் 3

★11 நகரங்கள் மீது பீரங்கி தாக்குதல்

★கோவில்கள், பள்ளிக்கூடங்கள் மீது தீக்குண்டு

## இறுதியான முழுமூச்சு தாக்குதல்

# 20,000 துருப்புகளுடன் முப்படை தாக்குதல்

விமானங்களிலிருந்து பாரசூட் மூலம் குதித்தார்கள்

27-5-87 மக்கள் குரல்

## போர் முனையில் அதுலத்முதலி

கண்ணில்பட்டவர்களை சுட்டுக்கொல்ல உத்தரவு

---

(10)

# யாழ் நகரை 'படிப்படியாக கைப்பற்றத் திட்டம்

தினமணி (26-5-87)

## இலங்கை மந்திரி அதுலத் முதலி தகவல்

## கூடுதலாக துருப்புகள் அனுப்பியிருப்பதாக கூறுகிருர்

கொழும்பு, மே 25— யாழ்ப்பாணப் நகரத்தை மீண்டும் "படிப்படியாக" கைப்பற்றுவதற்கு ஏதுவாக இலங்கை ராணுவம் நடவடிக்கை எடுத்துவருவதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சர் லலித் அதுலத் முதலி கூறினர்.

யாழ்ப்பாணத்தைச் சுற்றியுள்ள ராணுவ முகாம்களுக்குக் கூடுதலாக துருப்புகள் அனுப்பப்பட்டிருப்பதையும் அவர் குறிப்

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்